[illegible]

V 3 · No 48 · 4 Dec 1930


[illegible]

[illegible]

[illegible]

189132

976

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஞ டிசம்பர் மீ 4உ [No 48

19 FEB 19

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 941
2. குறுந்தொகை (பாட்டு 362—380)
   K. இராமரத்நம் ஐயர் B.A. 943
3. அப்பர் (ஓவியமும் கவித்வமும்)
   E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 947
4. நம்மாழ்வார் வைபவம் (2ம் பத்து 5ம் தசகம்)
   K. இராஜகோபாலாசாரியார் B.A., B.L. 949
5. "பெற்றேன் விடுதலை" (ஒரு சிறு கதை)
   K. இராஜகோபாலன் 950
6. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
   T. N. சேஷாசலம் B.A. B.L. 953
7. தமிழ்ப்பாடம் (இலக்கணம்) 955
8. ஞானமொழிகள்
   நவாலி க. வேலுப்பிள்ளை 956
9. வர்த்தமானம் 959


## கலாநிலயம்

### பெருமையின் பெருமை.

I

18912

நன்மை பயன் என்னுமிவ் விருசொற்களும் அந்தத்தில் ஒருபொருட் பன்மொழிகளாய் முடியுந் தத்துவத்தை முன்னர் யாம் இங்குச் சில தலையங்கங்களில் வகுத்துரைக்கலாயினோம். தத்துவங்களைத் தழுவியே உலகநடை வழக்குக்கள் பெரும்பாலும் ஒழுகுகின்றனவாயினும் நாளடைவில் சிற்சில சொற்கள் தம்தத்துவ வளமைதேய்ந்து தேய்ந்து மாநுடநாவில் மெலிந்துவரக் காண்கின்றோம். அன்னவகைச் சொற்களில் 'நல்லவன்' என்பது ஒன்று. 'இவன் நல்லன், அவன் நல்லவனல்லன்" எனப் பாகுபடுத்திப் பயின்றுவரும் மொழிகள் எவ்வெவரை யெவ்வகையால் வேறுபடுத்திக் குறிக்கின்றன வென்பதைக் கருத்தூன்றி நோக்குவோமாயின் நல்லவர் என்னப் படுவார் தம் உண்மைஇலக்கணத்தை மாந்தர் எத்தூரம் மறந்துவிட்டார் என்பது புலப்படும். இம்மறதி மாநுடப்பெருமையின் உறுதிக்கு இயன்றதன்றாகையால் யாரேநல்லவர் என்பதைச் சிறிதிங்குச்சோதிக்கு மாற்றால் அன்னவர்களை நினைக்கின்ற நற்பேறுடையவர்களாகலாம்.

நல்லவரிலக்கணத்தைப் பன்னப்பன்னப்பயனுளது. நல்லாரைக்காண்பதும் அவர்சொற் கேட்பதும் அரிதாய்க்கிடக்கு மிந்நாளில் அவர் குணங்களை உரைக்கவுங் கேட்கவும் இயலுமேல் அதனால் வரும்ஊதியம் அதிகமே. தேனென்ற அளவில் தித்திக்காமை நாவன்ன ஐம்புலன்களின் நுகர்ச்சிக்கே அடிமையாயினோர்க் குரியவோர் பழமொழி. உறுபொருளுணர்தற்கு அவாவும் உத்தமர்கள்,நல்லினத்தோர் உறவினை உரையளவிற் பெற்றாலும் உள்ளஞ்சிறந்து எய்திய இனிமையால் தூய்மையோ டுயர்ந்த செவ்வியவராவார். பெருமையின் பெருமையைக் கண்டாலன்றிச் சிறுமையின்சிறுமை தோன்றாது. இதனாற்றான் சிறுமையை எல்லாம் பெருமையெனக் கொண்டாடுகின்றனர்பலர். தீயகருமங்கள் செய்வானைக்குறித்து, "இவன்தீயன்" என்றுரைப்பது வாய்மையேயாய் நிற்கின்றதேனும், "நல்லவன்" என்று குறிக்கப்படுபவரெல்லாம் வாய்மையில் நல்லவரேயோ' என்றயிர்த்தற்குப் பெரிதும் இடமுளது. இதனால், பொல்லாதன புரிந்தும் நல்லவர்போல் நடித்தும் தம்வஞ்சனை வெளிப்படாவகை காக்கின்ற போலிகளைமட்டுமே கருத்துள்வைத்து நாமிங்குப் பேசுகின்றோ மென்றெண்ண வேண்டா. கடையினுங் கடையாயினோர் அவ்வினத்தவர். அவர் கிடக்க, தீமைகளைக்கரந்தும் வெளிப்படையாயும் புரிவதில்லா மாந்தர்களையே எடுத்துக் கொள்வோம். உலகவழக்கில், தீமைகள்

ஒன்றும் புரியாத காரணத்தினலேயே பலர் 'நல்லவர்' என்னும் பட்டத்திற்குப் பாத்திராகின்றனர். சிறுமையின் சிறுமையை அறியாத அறியாமையே அவர்களுக்கு இப்பட்டத்தைச் சூட்டிவைக்கின்றதென்னல் வேண்டும். நெருப்பல்லாததை யெல்லாம் நீரென்பது போலாம் இது. "சாத்தன் நல்லன். அவன் ஒருவர் வழிக்கும் போவதில்லை. தானுண்டு தன் பாடுண்டு என்று கிடக்கின்றான்—கொற்றனே தீயன், இவனுலிவ்வூரில் கெட்டகுடி பற்பல" என்னுஞ் சொற்களை எங்கெங்குங் கேட்கலாம்.கொற்றனைப் போலில்லாமையாலேயே சாத்தன் நல்லவனெனப் படுவது எங்ஙனம் அமையும்?நன்மை என்பது ஒரெதிர்மறை நிலையன்று. அவ்வாருயினுற்ருன் தீயனவல்லாத வெல்லாம் நல்லன வெனத்தகும். சாத்தனின் இந்த வர்ணனைக்கும் மண்குடைந் துயிர்வாழும் புழுவிற்கும் வேற்றுமை பெரிதில்லையே. ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாமையே பெருமையென்ற தன்மையில் மனிதரை மதிப்பது தகுதி என்ற நினைவினுள் அடங்கியஎவ்வம் சிறியதன்று. நல்லவர்களல்லாதாரைத் தீயவர் என்று அழைக்க வேண்டுவதுபோகத் தீயவர்கள் அல்லாதாரை நல்லவர்களென்னப் பாராட்டும்பேதைமையை என்னென்பது. நீரல்லாதனவற்றை யெல்லாம் நெருப்பென்னல் நேரிதன்ருயினும் மாநுடப் பெருமையை மதித்துணர முயல்கின்ற இச் செவ்வியில் மன்னிய நன்மையால் திகழாதாரை யெல்லாந் தீயவரென்னுமினத்திற் சேர்த்துவிடுவதே நேரிதாம்.

இனி, இவ்வெதிர்மறை வகையிலன்றி, நற்கருமங்கள் புரிகின்ற காரணத்தாலும், பொறை அறிவு ஈகை வாய்மை பக்தி முதலிய குணங்களாலும் நல்லவரெனத்தக்கார் சிலருளர். இவர்களேனும் உண்மையாய நல்லவர்களாவாரோ என்பதைச்சிறிது நுணுகி நோக்கி ஆராய்தல் வேண்டும். முதலிடைகடையெனு முத்திறத்தினில் மனித வினத்தை அடக்குவது பண்டைவழக்கு. இதன்படி, நற்கருமங்க ளாற்றுபவர் முதலாயவரென்றும், நல்லதும்புரிவதின்றித் தீயதும் புரிவதின்றிச் சும்மாசெல்பவர் இடையாயவரென்றும்' தீமைகளையேபுரிபவர்கடையாயவரென்றும்கொள்வது மரபாயிருக்கின்றதெனினும், இவ்விடையாயவர்களை முதலாயவர்களோடு சேர்த்து நல்லவரென்னப் பகர்தல் விபரீதமன்ருே. வேண்டுமெனின் முதலாயவர்களையே மீண்டும் முத்திறப்படுத்தி, தீமை தான் புரிகின்றிலர் என்பதல்லால் வேறொரு சான்றும் தம்சார்பு கொணர்தற்கு வல்லாரல்லாதாரை நல்லவர்களில் கடையாய இனத்தினர் எனச்சாற்றுவது ஒருவாறு ஏற்றதாகலாம். இதனளவிலேயே தமக்குப்புகழும் பெருமையும் உளதென்று மகிழ்வார் மகிழ்க. அப்புகழும் மகிழ்ச்சியுமே, மனிதர் எத்துணை இழிந்தவராகக் கூடும் என்பதை எடுத்துக்காட்டும்.

செம்மையிற் சிறந்த சிந்தையினராய், வெஃகல் வெகுளல் முதலிய குற்றங்களைக்களைந்து, பிறர் பிழை பொறுத்தும் இடுக்கண் தீர்த்தும் இரக்கமொடு தூய்மையும் ஈகையொடு வாய்மையும் உடையராய் விழுமிய ஒழுக்கத்தினின்று ஒருபோதும் வழுவாது இறைவன் தாளிணைகளை மனத்தகத்திருத்தி வாழ்வாரும் ஒருசில ரிலராகார். இன்னவர்களை நல்லவர் என்றுரைத்தல் முறையே. எனினும் இவர்களுக்குள்ளும் இருவகையினர் இருப்பதற்கியலும். அவ்விருவகையினர்களுள் ஒருவகையினரை, முதலாயவர்களை முத்திறப்படுத்திய உட்பிரிவில் இடையாயவர் என்று இயம்பலாம். மற்றவகையினர் முதலாயமாந்தரிலும் முதலாகும் நல்லவர் என்னும் பெயர் பெறுவதற்குரியவர். இப்பிரிவின் பயனும்பொருளும் யாதெனஉணர்வதற்கு ஆழ்மிகவுடைய அறிவும் அமைதியும் வேண்டும்.

நற்குணநற்செய்கைகளால் திகழ்பவர்களில்,அதனுல் தமக்கு இம்மையிலும் மறுமையிலும் ஊதியம் பெரிதுண்டு என்னும் நினைவுபற்றித் தூண்டப் படுபவர் பெரும்பாலோர். பிறர்க்கீந்தால் தன் செல்வம் பெருகுமென்றும், புண்ணியங்கள் புரிந்தால் தனக்கு வானோர் உலகம் வாய்க்குமென்றும், கடவுளை நம்பினுல் அவர் கைவிட மாட்டாரென்றும் நாலோர் உரைக்கும் உரைகளையும் தம்முடைய அனுபவத்தையும் உட்கொண்டு அதன்படி பாவத்திற் கஞ்சிப் புண்ணியங்களைப் போற்றிக் கடவுளைவழிபட்டு வாழ்வாரெனின் பழுதற்ற வாழ்க்கையராயினும் அவர் உத்த மோத்தவராவதற்கு இன்னும் இரண்டுபடி உயரவேண்டும்.

புண்ணியங்கள் புரிவதால் புகழும் பெருமையும் செல்வமும் வாய்க்கின்றன வென்னும் கருத்தினுல் விவகரிப்பவர்களைக் காட்டிலும் ஒருபடி உயர்ந்தவர் யாரெனில், புகழும் பெருமையும் மறுமையின்பமும் கிடக்க, வாய்மையின்வழி ஒழுகுதலே தம்மனத்திற்கு அமைதியை அளிக்கின்றதென்பதை உணர்ந்து அவ்வமைதியின் பொருட்டே அறத்தாறு கடைபிடிப்பவராவர். எவ்வெவர்க்கும் தம் இருகையால் எடுத்தெடுத்து ஈதலால், வருந்தி வந்தவர் துன்பந் தீர்கின்ற நற்பயனை நாடுவதன்றியும் அவர் திருந்து முகங்களைக் காணும் விழைவினரும் ஆகின்றனர் இவர். இரக்கத்தால் ஈகின்றனரிவர் என்பது உண்மையேயாயினும்,ஈத்துவக்கும் இன்பத்தை அறிவதால்அவ்வின்பத்தின் இச்சையே இவர்களை இயக்கலாகின்றது. இதனுல் அவர்குணமொன்றுங் குறைகின்றதில்லையாயினும் உத்தமர்களில் உத்தமர்கள் ஆவதற்கு அந்நிலையும் போதாது.

அறத்தினுல்வரும் இன்பத்திற்கவாவி அதனைக் கடை பிடிப்பாரில் வேறொரு சாராரும் உளர். இம்மை மறுமைகளில் இவையிவையெனக் குறிக்கப்படும் இன்பங்களை எண்ணுமல், இதனுல் தனக்கு வரும்பயனையும் தூக்காமல்,பயனெதுவாயினும் அறங்களைப் புரிவதே தம்கடமை யென்னுந்துணிபினுல் ஆற்றுபவர் அவர். ஆற்றியாற்றி வருங்கால், அலாநெறிப்படுவதற்கு அஞ்சியும் அறத்தாறொழுகுதற்கே அவாவியும் கடவுளைப் பரவுங்கால் பூரித்தும் திகழ்கின்ற தம் இயற்கையைத் தாமேதேர்ந் துணர்ந்தவராகி "நெஞ்சத்து நல்லம் யாம்' என்ற நினைவில் நிலைத்தவராகின்றனர். இந்நன்னிலை வாய்க்கப்பெறுவது அரிதினும் அரிது என்பதற்கு ஐயமில்லை யெனினும்' அதனினும் உயர்ந்தோர் வேறுளர்.



# குறுந்தொகை

[928-வது பக்கத் தொடர்ச்சி]

19 FEB 1931

வேம்பற்றூர் கண்ணன்கூத்தனுர் } 362 { குறிஞ்சி

வெறியாடலை விலக்கித் தோழி அறத்தொடு நின்றது.

முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன்,
சினவ லோம்புமதி, வினவ லுடையேன்;
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவள் நறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயின், அணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்பன்
ஒண்டா ரகலமும் உண்ணுமோ பலியே.

(உரை). முருகனைக் குறித்து வெறியாடலைச் செய்து பூசனைபுரிய வந்த முதறிவுவாய்ந்த வேலா, நான் உன்னை ஒன்று கேட்டலைச் செய்யவேண்டியவளாக இருக்கின்றேன்; சிறிய செம்மறியாட்டைக் கொன்று அதன் குருதியோடு பல வகைத்தான சிறு சோற்றுத்திரளைக்கலந்து, முதலில் இவளுடைய நெற்றியிலே தீற்றிப் பின்புவழிபட்டுக் கொடுத்தனையாயின் அப்பலியை, இவளைத் தீண்டித்துன்புறுத்திய வானைத் தொடும் பெரிய மலைநாடனது விளங்கும் மலர் மாலையை யுடைய மார்பும் உண்ணுமோ? கோவித்தலைவிட்டு இதற்கு நீ பதில் உரைப்பாயாக.

முருகு - (ஆகுபெயர்) முருகனைக் குறித்தெடுத்த வெறியாட்டு. அயர்ந்து வந்த - அயரவந்த. முது - முதுமை; முதிர்ந்தஅறிவு. அவிழ்-அவி;சமைக்கப்பட்டது. மடை-சோறு. அவிழாகிய மடை. அகலம் - மார்பு.

இவளை அணங்கியது தெய்வமொன்றும் அன்று, மலை நாடனது மார்பே என்று வேலனுக்கு உரைப்பாளாய்த் தோழி தன்னன்னைக்கு அறத்தொடு நின்றதாம்.

---

சோல்லூர்க் கோற்றனுர்] 363 [பாலை

தலைமகன் தான் பிரியக் கருதியதை உணர்த்தக் கேட்ட தோழி அவனைச் செலவழுங்குவித்தது.

கண்ணி மருப்பி னண்ண னல்லேறு
செங்கோற் புதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் மரையா நோக்கி வெய்துற்றுப்
புல்லரை யுகாஅய் வருநிழல் வதியும்
இன்ன வருஞ்சுர மிறத்தல்
இனிதோ, பெரும, இன்றுணைப் பிரிந்தே.

(உரை). பெரும், இனிய துணைவியான காதலியை விட்டுப் பிரிந்து, பூங்கொத்தைக் கொண்ட சிறந்த நல்ல மரையினேறு செவந்த தாளோடுகூடிய அறுகம்புல்லின் நீண்ட கொத்தைக் கடித்துத் தின்னும் மென்மைவாய்ந்த கண்ணையுடைய பெண்மரையைப் பார்த்து வருந்தி புன்மையான அடிப்பாகத்தையுடைய உகாய்மரத்தினடியில் வரும் நிழலிடைத் தங்கும் துன்பத்தை விளைப்பதாகிய அரிய சுரத்தைக் கடந்து செல்லுதல் இனியதொன்று ஆகுமோ?

புதவம் - அறுகம்புல். உகாஅய் - ஒரு மரம்; பாலை நிலத்தின்கண்ணுள்ளது.

---

ஒளவையார்] 364 [மருதம்

அரிற்பவர் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூரன்
பொற்கோ லவிர்தொடித் தற்கெழு தகுவி
எற்புறங் கூறு மென்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தனர், அவரைக்
கண்போன் மற்றதன் கள்வர்
மண்கொளற் கிவரு மன்னர் போரே.

(உரை). சிறுதூருகப் படர்ந்த கொடிப்பிரம்பின் புறத்தைப் போன்ற வரிகளோடுகூடிய புறத்தையுடைய நீர்நாய் வாளை மீனுகியவுணவைக் காலையிலே பெற்றுண்ணும் மருதநிலத் தலைவனுக்கு மனைவியாய்ப் பொருந்திய பொன்னுற் செய்யப்பட்ட திரண்ட அழகிய வளையல்களையுடைய தலைவி 'என்னைப் பழித்துப் புறங்கூறியது எதற்காக?' என்று சினந்து அவனுக்குரிய விளைந்த முன்கையோடுகூடிய மூங்கிலையொத்த தோள்களையுடைய பரத்தையர்பலரும் நாள்தோறும் துணங்கைக் கூத்தாடினராய் ஒருங்கே, அவர்மீது போருக்கெழுந்தனர்; அது அன்னியன் நாட்டைப் பிடிப்பதற்குச் சேனையுடனெழும் அரசர் போரெழுதலைப் போன்றிருந்தது.

அரில் - சிறு தூறு. பவர் - கொடி. தகவி - தகைவி, தகுதியினையுடையவன்; ஊரன்தற்கெழுதகுவி, என்றிணைக்க. 'துணங்கை'-இருகையையும் இடுப்பினிருபுறத்திலும் வைத்துக்கொண்டு மகளிர் அல்லது பேய்கள் ஆடும் ஒருவகைக் கூத்து. ஈற்றயலடி பொருள்காணக் கூடாதவாறு பாடம் சிதைந்திருக்கின்றது.

---

மதுரை நல் வெள்ளியார்] 365 [குறிஞ்சி

வரையாதொழுகுந் தலைமகனுக்குத் தோழி தலைமகளின் ஆற்ருமையை அறிவித்து வரைவுகடாவியது.

கோடீ ரிலங்குவளை நெகிழ நாளும்
பாடில கழிந்துகட் பனியா னவே,
துன்னரு நெடுவரைத் ததும்பிய வருவி
தண்ணென் முழவின் இமிழிசை காட்டும்
மருங்கிற் கொண்ட பலவின்
பெருங்கன் னாட, நின் னயந்தோள் கண்ணே.

(உரை). கிட்டுதற்கரிய நெடிய வரையினின்று ததும்பி இழியும் அருவி 'தண்'ணென்றிசைக்கும் முழவினது ஓசையைச் செய்வதும், பக்கங்களில் பலா மரங்களைக் கொண்டதுமான மலைநாடா, நின்னை விரும்பியுற்ற எந்தலைவியின் கண்கள், சங்கையறுத்துச் செய்த விளக்கமுற்ற வளைகள் கழலும்வண்ணம் துயில்கொள்ளாது நாள்தோறும் கண்ணீர்வடித்தலை நீங்காவாயின. (இதனையுணர்ந்து நீ பரிகரிப்பாயாக.)

கோடு - சங்கு. பாடு - படுதல், மூடுதல், துயிலுதல். கட்பனி - கண்ணீர். பெருங்கல் - மலை.

கண், நெகிழ, கழிந்து, ஆனவே, என வினை முடிக்க.

---

பேரிசாத்தனுர்] 366 [குறிஞ்சி

இற்செறிப்புற்ற காவல்மிகுதிக்கண் வேறுபட்ட தலைமகளின் வேறுபாட்டைக்கண்டு,'இஃது எதனுலாயது?' என்று தன்னை வினவிய தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது.

பால்வரைத் தமைத்த லல்ல தவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ?
வெறியாள் கூறவு மமையாள், அதன்றலைப்
பைங்கண் மாச்சுனை பல்பிணி யவிழ்ந்த
வள்ளிதழ் நீல நோக்கி, உள்ளகைப்
பொழுகு கண்ண ளாகிற்
பழுதன் றம்ம, இவ் வாயிழை துணிவே.

(உரை). வெறியாட்டாளன் இது தெய்வத்தாலுயது என்று கூறி (அதற்குச் சார்பியாகப் பூசனை வழிபாடுகளைச் செய்து) வைத்தும் இவன் மனவமைதி பெற்றிலன்; அது

மாத்திரமன்று; அதற்குமேல் பெரிய சுனையிற் கட்டவிழ்ந்த பல அகன்ற இதழ்களையுடைய புதியதேனைக் கொண்ட கருநீல மலர்களை நோக்கி உள்ளத்தை வருத்தியெழுந்த கண்ணீரொழுகுங் கண்ணினளாய் இருப்பாளாயின், இது விதியின் செயலென்று அமைத்தலன்றி, இவர்களுடைய மனப்பாங்கை அளந்தறிதற்கு நாம் வல்லோமோ? இவளுடைய மனவுறுதி குற்றமானதன்று; தக்கதேயாகும்.

பால் - பழவினை, விதி. வரைத்து - வரைத்து என்று, ஒரு சொல் வருவிக்க. 'அவர்' என்றது தலைமகளையும் தலைமகனையும் குறிப்பாற் சுட்டியது. வெறியான் - வெறியாளன்; வேலன். அகைப்பு - (ஆகு பெயர்) அகைத்தெழும் கண்ணீர்.

மதுரை மருதனிளநாகனார்] 367 [குறிஞ்சி

வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் வரவு தாழ்த்துழி வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

கொடியோர் நல்கா ராயினும் யாழநின்
தொடிவிளங் கிறைய தோள்கவின் பெறீஇயர்
உவக்காண் தோழி, அவ்வந் திசினே,
தொய்யல் மாமழை தொடங்கலி னவர்நாட்டுப்
பூச லாய புகன்றிழி யருவி
மண்ணுறு மணியிற் றோன்றுந்
தண்ணுறு துறுக லோங்கிய மலையே

(உரை). அன்பிலராகிய தலைவர் வந்து உனக்கு அருள் புரியாராயினும் உனது தொடிகளையணிந்த முன்கையையுடைய தோள்கள் பழைய அழகைப் பெறுமாறு, அதோத் தோன்றலுற்றன், நிலத்தைச் சேறு செய்யும் பெருமழை பெய்யத் தொடங்கலின் முழக்கத்தோடு மகிழ்ந்து பாயும் அருவிநீர் கழுவுதலால், மாசுநீக்கக் கழுவப்படும் நீல மணியைப் போலத் தோன்றும் கற்பாறைகளும், அவையோங்கிய அவர் நாட்டினகத்ததாகிய மலையும். அவற்றை வந்துநீ காண்பாயாக.

யாழ - ஒரு முன்னிலையசைச் சொல். 'உவக்காண் அவ்வந்திசின்' என்பதை 'அவ்வந்து உவக்கண்டிசின்' என்று மாற்றுக. தொய்யல் - சேறு. பூசல்-பேரொலி. புகன்று - மகிழ்ந்து, விரும்பி. தண் - நீர். 'அருவித்தண்ணுறு துறுகல்' என்று கூட்டுக.

'அவரைப் பெற்றுக் கூடி மகிழப்பெறுவிடினும் மழைபெய்து விளக்கமுற்ற அவர்நாட்டுமலையைக் கண்டேனும் ஒருவாறு ஆற்றியிரு; குறித்த கார்காலம் தொடங்கியதால் இனிக் காதலர் வரவு தாழ்க்கார்' என்று சொல்லித் தலைவியைத் தோழி தேற்றினாள் என்க.

நக்கீரர்] 368 [குறிஞ்சி

வரைவொடு வந்த தலைமகனைத் தமர் ஏற்றுக்கொண்டு வரைவுடம்பட்டதைத் தனக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் மகிழ்ந்து உரைத்தது.

மெல்லிய லோயே, மெல்லிய லோயே ;
நன்னாள், நீத்த பழிதீர் மாமை
வனப்பி னூற்றுத லல்லது செப்பிற்
சொல்ல கிற்றும், மெல்லிய லோயே;
சிறியரும் பெரியரும் வாழு மூர்க்கே
நாளிடைப் படாஅ நளிநீர் நீத்தத்
திண்கரைப் பெருமரம் போலத்
தீதில் நிலைமை முயங்குகம் பலவே.

மெல்லியலாகிய என்தோழீ, மண நாளாகிய நல்ல நாளில் இப்பொழுது நானிழந்த குற்றமற்ற மாமை நிறத்தோடு கூடிய அழகை மீளப்பெற்று அதனால் எனது உள்ள மகிழ்ச்சியைத் தெரிவிப்பதன்றி சொற்களால் தெரிவித்தலாகாது. சிறியாரும் பெரியாரும் வாழும் தலைமகனதுஊரின்கண், நீர் வற்றாது என்றும் நிறைந்த குளத்தின் வலிய கரையிலுள்ள பெரிய மரத்தைப்போல அழிவற்ற நிலையை உடையேமாய், ஒரு நாட்கூட இடையீடின்றி நெடிது கூடி (இன்புற்று) நாம் வாழ்வோமாக.

ஆற்றுதல் - சொல்லுதல், செப்பு - சொல், வார்த்தை. ஊர்க்கு - (உருபு மயக்கம்) ஊர்க்கண். இடைப்படா - இடைப்படாது; (ஈறுகெட்ட வினையெச்சம்); பெயரெச்சமாகவேகொண்டு 'நீர்' என்பதற்கு அடையாக்கலுமொன்று. நிலைமை - நிலைமையோடு(மூன்றாம் வேற்றுமைத் தொகை). பல - பலநாள்; பலவகை இன்பங்களையும் என்றுமாம்.

குடவாயிற் கீரத்தனார்] 369 [பாலை

தோழி தலைமகளுக்குத் தலைமகன் உடன்போக்கு நேர்ந்ததை உணர்த்தியது.

அத்த வாகை அமலைவா னெற்றின்
அரியார் சிலம்பின் அரிசி யார்ப்பக்
கோடை தூங்குங் கானம்
செல்வாம், தோழி; நல்கினர் நமரே.

(உரை). காட்டிடத்துள்ள வாகையின் காற்றால் அலைப்புண்டொலிக்கும் நெற்றின் விதை, பரல்களை உள்ளேயுடைய சிலம்பைப்போலஒலிக்குங் கோடையின் வெப்பந்தங்கிய கானத்திடையே நாம் தலைமகனுடன் செல்வோம். நமது காதலர் அதற்கு அனுமதி கொடுத்துவிட்டார்.

அமலை - ஒலி. வான்-காற்று. அரிசி-விதை.வான் நெற்று-வாளுல் அசையலுற்ற வாகைநெற்று: உருபும் பயனும் உடன்தொக்க மூன்றாம் வேற்றுமைத் தொகை. அரி - சிலம்பினுள்ளேயிடும் பரல்.

அமலை - ஒலி. வான் - காற்று. (ஆகு பெயர்). 'அத்த வரைகை' 'வானெற்றி' என்ற பாடத்துக்குப் பொருள் காணக்கூடவில்லை.

வில்லகவிரலினார்] 370 [மருதம்

கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் என்பதைக் கேட்டபரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

பொய்கை யாம்ப லணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்குந் தண்டுறை யூரனொ
டிருப்பி னிருமருங் கினமே; கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தியவர்
நல்லகஞ் சேரி னொருமருங் கினமே.

(உரை). ஆம்பலின் அழகிய செந்நிறம்வாய்ந்த கொழுத்த முகைகளை வண்டுகள் குடைந்து, மலரச்செய்யும் பொய்கைகளையுடைய மருதநிலத்தலைவனுடன் உட்கார்ந்திருக்கும் காலத்தில் நாங்கள் இருவேறு இடையையுடைய உடலினராகத் தோன்றுவோம்; ஒரணையிற் படுத்திருக்கும் போது வில்லைப்பற்றுங் கைவிரலைப்போல இறுகநெருங்கி எங்கள் மனத்தைப்போல உடலும் ஒன்றுபட்டு ஒரு மருங்குலையுடைய ஒரே உடலினராக நெடுங்காலம் இருப்பேம். (இஃதன்றி எம்மிருவருக்கும் உயிரொன்றே.)

உள்ளுறை:—ஆம்பல் முகைகளை மலர்வித்துத் தேனையுண்ணும் வண்டைப் போலத் தலைமகனும் நேயத்தால் தானே மலர்தலில்லாத உள்ளத்தினராகிய மகளிரையும்தன்னிடத்துக்காதலுறச் செய்து இன்பநுகரும் இயல்பினன் என்று தலைமகள் பழித்துரைத்ததைப் பரத்தை கொண்டுமொழிந்ததாம்.

உறையூர் முதுகூற்றனார்] 371 [குறிஞ்சி

வரைவிடை வைத்துத் தலைமகன் பிரிந்தவிடத்து வருந்திய தலைமகன் தன்னை வற்புறுத்திய தோழிக்குச் சொல்லியது.



கைவளை நெகிழ்தலு மெய்பசப் பூர்தலும்,
மைபடு சிலம்பிற் கறியொடு சாந்தம்
மைபடு சிலம்பி னைவனம் வித்தி
அருவியின் விளைக்கு நாடனொடு
மருவேன், தோழி, அது; காமமோ பெரிதே.

(உரை). கைவளைகள் நெகிழ்தலுறும்படியும், மேனியிற் பசலை பரத்தலுறும்படியும் மலையில் மலைநெல்லை விதைத்து அருவி நீரைக் கொண்டு வளர்த்துப் பயிராக்கி விளைவிக்கும் மலைநாடனொடு நான் இனிக் காதலைச் செய்யேன். (என்று உண்மையாகச் சொல்வேனாயினும்,) எனது காமமோ தாங்கமாட்டாதவாறு பெரிதாய் இருக்கின்றது.

நெகிழ்தலும், ஊர்தலும் - நெகிழ்தலுறவும், ஊர்தலுறவும் என்றொருசொல் வருவிக்க. 'அது'என்றது 'நினைத்து வருந்தாது விட்டிடு'என்று தோழி வற்புறுத்திய தனது காதலைச் சுட்டி நின்றது.

உள்ளுறை:—முயற்சியின்றிக் குன்றவர் மலையிடத்து ஐவனத்தை விதைத்து மழையருவிநீரால் விளைவிப்பதைப் போலத் தலைமகனும் வரைந்துகொள்ளும் முயற்சியின்றிப் பிறருதவியால் தனதுநலத்தை நுகர விரும்புகின்றான் என்று குறித்தவாறும்.

விற்றூற்று முதெயினனார்] 372 [நெய்தல்

இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகன் கேட்பத்தோழி தலைமகளுக்குச் சொல்லுவாள்போலச் சொல்லியது.

பனைத்தலைக்
கருக்குடை நெடுமடல் குருந்தொடு மாயக்
கடுவெளி தொகுத்த நெடுவெண் குப்பைக்
கணங்கொள் சிமைய வணங்குங் கானல்
ஆழிதலை வீசிய அயிர்சேற் றருவிக்
கூழை பெயக்காக் குழீஇய புதுக்கை
புலர்பதங் கொள்ளா விரவை
அலரெழுந் தன்றிவ் வழுங்க லூரே.

இப்பாட்டின் பொருள் நன்கு விளங்கவில்லை. இன்னும் ஆராய்ந்து பின்பு எழுதப்படும்.

மதுரைக் கோலம்புல்லனார்] 373 [குறிஞ்சி

அலர் மிக்கவழி ஆற்றானாகிய தலைமகட்குத் தோழிசொல்லியது.

நிலம்புடை பெயரினும் நீர்திரிந்து பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றி
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சல்,[னும்
கேடெவ னுடைத்தோ, தோழி, நீடுமயிர்க்
கடும்பல் லூகக் கறைவிர லேற்றை
புடைத்தோடு புடையூ நாறுபல வுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனொ டமைந்தநந் தொடர்பே.

(உரை). நீண்டமயிரையுங் கூர்மையான பல்லையுங் கரிய விரலையுமுடைய ஆண்கருங்குரங்கு புடைத்ததாலுடைந்து உதிர்ந்த பலாப்பழத்தின் மணம் காந்தட்செடிகளையுடைய குறவர் குறிச்சியிடத்துச் சென்று கமழும் மலைநாடனுடன் நமக்குண்டான நட்பு நிலம் நிலைதடுமாறுமாயினும்,நீர் தனது தன்மையிற் பிறழுமாயினும், இலங்குந் திரைகளையுடைய பெரிய கடலுக்குக் கரையுண்டாகுமாயினும் கேடெதனையும் உடைய தொன்றாகாது. ஆதலால் வெவ்விய வாயையுடைய பெண்கள் கூறும் அலரையஞ்சி நீ வருந்தாதே.

'நிலம்......தோன்றினும் கேடெவனுடைத்தோ'-நிலம், நீர் முதலியவை தமதியற்கை திரிந்து மாறுபாடுறினும், தலைவன் நட்பு ஒருகாலும் மாறுபடாது என்றவாறும். கௌவை - அலர். கறை - கறுப்புநிறம். ஊகம் - கருங்குரங்கு. ஏற்றை - ஆண். புடைத்தோடு புடையூ' என்பதின் பொருள் இனிது புலப்படவில்லை

உள்ளுறை:—கருங்குரங்கினுண் புடைத்துண்ட பலாப்பழத்தின் மணம் குறவர் வாழுஞ் சேரியிடத்துச் சென்று கமழ்வதைப் போலத் தலைமகன் தலைவியின் நலனையுண்டு சிதைத்த செயல் சேரியெங்கும் வெளியாகி அலரெழலுற்றது என்றவாறும்.

உறையூர்ப்பலாகாயனார்] 374 [குறிஞ்சி

தலைமகளுக்குத் தோழி தான் அறத்தொடு நின்று உண்மையை வெளிப்படுத்திவிட்டமையால் தமர் வரைவு நேர்ந்ததை உரைத்தது.

எந்தையும் யாயு முணரக் காட்டி
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் தலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கையி னொன்றா யின்றே,
முடங்க லிறைய தூக்கணங் குரீஇ
நீடிரும் பெண்ணைத் தொடுத்த
கூடினு மயங்கிய மைய லூரே.

(உரை). தந்தையுந் தாயும் உணருமாறு உனது களவொழுக்கத்தை நான் வெளிப்படுத்திக் கூறியபின் மலைநாடனாகிய தலைமகன் அவரிடம்வந்து உன்னை மகட்கொடை வேண்டியிரப்பவும் அவர் அதற்கிணங்கிய நல்ல மணவினைக்குக் காரணமான தீர்மானத்தை அறிந்து, வளைந்த வீட்டினிறப்புக்களில் வாழும் இயல்பினவாகிய தூக்கணங்குருவி நீண்ட கரிய பனைமரத்தில் கூடுகட்டினாற்போல மிகவும் அறியாமையால் மயங்கிய இவ்வூரும் அதற்குடன்பட்டுவிட்டது. (இனி நீ வருந்தற்க.)

ஒன்றாயின்று - ஒன்றாயிற்று; ஒன்றுபட்டது. இறை - வீட்டினிறப்பு. ஊர் - ஊரிலுள்ளார்.

375
[குறிஞ்சி.]

இரவுக்குறிக்கண் வந்து தலைமகன் சிறைப்புறத்தானாக இரவுக்குறி மறுத்து அவனை வரைவு கடாவுவாளாய்த் தலைமகளுக்குத்தோழி உரைத்தது.

அம்ம வாழி தோழி, இன்றவர்
வாரா ராயினோ நன்றே, சாரற்
சிறுதினை விளைந்த வியன்க ணிரும்புனத்
திரவரி வாரிற் றொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்துங் கறங்கும்
யாமங் காவல ரவியன் மான்றே.

(உரை). தோழீ, நான் சொல்லுமிதனைக் கேட்பாயாக. சிறிய தினை விளைந்து (முற்றிய) அகன்ற சாரலிடத்துள்ள பெரிய புனங்களில் தினையை அறுப்பவருடைய தொண்டகமென்னும் சிறுபறை, இரவில் ஊர்க்காவலர் யாமந்தோறும் இசைக்குந் துடியென்று மருளுமாறு, இரவின் நடுயாமத்திலும் ஒலியாநிற்கும். ஆதலால் காதலன் இன்றிரவு குறிக்கண் வாராதிருப்பானாயின் நன்றாம்.

அரிவார் - அறுப்பவர். அஇயன் - அந்த துடி யென்னும் வாச்சியம். இயம் - இயன்; போலி. மான்று - மான்ற, மயங்க; இயன் என்று மயங்க. அரிவாரது தொண்டகப் பறையை ஊர்க்காவலரிசைக்கும் பறையென்று மயங்குமாறு அது நடுராத்திரியிலும் ஒலிக்கும் என்றதாம்.

படுமரத்துமோசிகீரன் கோற்றனார்} 376 [பாலை

பொருளீட்டற்கண் தன்னை வலிக்கு நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்குவித்தது.

மன்னுயி ரறியாத் துன்னரும் பொதியிற்
சூருடை யடுக்கத் தாஅங் கடுப்ப
வேனி லானே தண்ணியள் பனியே;
வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி யையென
அலங்குவெயிற் பொலிந்த தாமரை
உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே.

(உரை). நெஞ்சே, (பொருளீட்டலை விரும்பி நாம் தலைவியை விட்டுப் பிரிந்து) மன்னுயிர்கள் அளந்தறியாததும், நெருங்குதற்கரியதும், அஞ்சத்தக்க தெய்வங்களையுடையதுமான பொதியமலையினிடையே வேனிற்காலத்து செல்வோமாயின், ஒளிசெய்யும் வெயிலால் அழகுற்று விளங்கிய தாமரை (பனியோடு கூடிய அந்தி நேரத்தில்) சூரியனுடைய சுருங்கிய கதிர்கள் இதழ்களைக் குவித்தலால் கூம்பிப் புறத்தே பனித்திவலையோடு வெதும்பினாற் போல, தலைமகளும் உள்ளத்திற்கொண்ட வெப்பத்தால் வெயர்த்து(வெய்துயிர்த்து) வருந்துவாள். (ஆதலால் நாம் நஞ்செலவை இப்பொழுது தவிர்வோமாக.)

சூரியனொளியாற் பொலிவுற்று விளங்கிய தாமரைமலர் சூரியன் மறைந்ததுங் கூம்பிச் சாம்பினாற்போலத் தான் உடனுறைந்தபோது இன்புற்று மகிழ்ந்த தலைமகள் தான் பிரிந்த காலத் துன்புற்று வாடி வருந்துவாள் என்பான் 'தண்ணியள்......தாமரை உள்ளகத்தன்ன சிறுவெம்மையள்' என்றானும்.

சூர் - அச்சந்தரும் தெய்வங்கள். ஆங்கு அடுப்ப. ஐயென - அழகுற; ஐ - அழகு. அலங்கு - ஒளி செய்யும்; அசையும் என்றுமாம். வெம்மையள் - வெம்மையளாவள்.

---

மோசிகொற்றனார்] 377 [குறிஞ்சி

வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்தவிடத்துத் தான் ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் அழிந்து கூறியது.

மலரே ருண்கண் மாணலந் தொலைய
வளையேர் மென்றோள் நெகிழ்ந்ததன் றலையும்
மாற்றா கின்றே, தோழி, ஆற் றலையே;
அறிதற் கமையா நாடனொடு
செய்து கொண்டதோர் சிறுநன் னட்பே.

(உரை). உள்ளக்கருத்து இன்னதென்று அறியவொண்ணாத மலைநாடனுடன் நாம் செய்துகொண்ட சிறிய நல்ல நட்பு, அது எனது நீலமலர் போன்ற மையுண்ட கண்களின் சிறந்தவழகைக் கெடுத்து, வளையல்களையணிந்து அழகு வாய்ந்த மெல்லிய தோள்களை வாடி மெலியும்படிசெய்ததன் மேலும், இந்நோயைத் தீர்க்கும் மருந்தாகாமலிருக்கின்றது. தோழீ, நீயும் என்னை ஆற்றுகின்றிலை. (நான் இனி யாது செய்கேன்?).

மாற்று - நோயைத் தீர்க்கு மருந்து. ஆகின்று-(விகாரம்) ஆகலின்று.

---

கயமனார்] 378 [பாலை

தன்மகள் தலைமகனுடன் சென்றதை உணர்ந்த நற்றாய் சுரத்தின் வெம்மை தணியுமாறு தெய்வத்தை வேண்டியது.

ஞாயிறு, காயாது மரநிழற் பட்டு
மலைமுதற் சிறுநெறி மணல்மிகத் தாஅய்த்
தண்மழை தலையல ரைக்குகந்த தீத்துச்
சுடர்வாய், நெடுவேற் காளை யொடு
மடமா வரிவை போகிய சுரனே.

(உரை). சூரியனே, நெடிய வேலையேந்திய தலைமகனுடன் இளமைபொருந்திய மாமைநிறத்தையுடைய என்மகள் சென்ற சுரத்தில் மிகச் சுடாமலும், மரங்கள் நிழலைத்தந்து மலையினிடத்துச் சிறுவழியில் மணல் மிகுதியாகப் பரந்து குளிர்ந்தமழை பெய்து அவன் தலையிற் சூடுவதற்கு மலர்களையும் இடையிலுடுப்பதற்குத்தகுந்த தழை முதலியவற்றையுந் தந்துதவும்படியாகவும் நீ ஒளிர்வாயாக. (நான் உன்னைத் தொழுது வேண்டுகின்றேன்.)

ஞாயிறு - அண்மை விளி. சுடர்வாய் - வியங்கோள் வினைமுற்று. இவ்வாறன்றி, காயாது, பட்டு, தாஅய், ஈத்து என்னும் வினையெச்சங்களுக்கு, 'உதவும்படி தெய்வங்களே, உம்மை வேண்டுகின்றேன்' என்று முடிபு வருவித்து, 'சுடர்வாய்' என்பதைப் பெயரெச்சமாக்கி வேலுக்கு அடையாக்கினும் அமையும்.

---

379

[குறிஞ்சி]

நொதுமலர் வரைவு நேர்வுழித் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது.

இன்றியான் டையனோ, தோழி, குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கின்
நேர்கண் ணகன்மா மணிபெறாஉ நாடன்
அறிவுகாழ்க் கொள்ளு மளவைச், 'சிறுதொடி,
எம்மின் வருகுவை நீ'யெனப்
பொம்ம லோதி நீவி யோனே.

(உரை). 'நமது களவொழுக்கத்தை உன்தமரறிந்து மாறுபாடின்றி அதற்கு மனமொருப்படும் வரையில் நீ என்னைப் பின்தொடர்ந்து என்னுடன் வந்திடு' என்று சொல்லி உனது பொலிவுற்ற கூந்தலைத்தடவித் தலையளிபுரிந்த தலைமகனுன, குன்றினிடத்தே முந்திக்கிழங்கை அகழ்ந்தெடுத்தக் பழங்குழியை மறுபடியுங் கெண்டிய குறமகன் கிழங்குக்குப் பதிலாகச் சுடர்மிக்க மணிகளைப்பெறும் மலைநாடன், இன்று யாண்டுச் சென்று விட்டனனோ, அறியேன் தோழீ.

'மாத்துணி' என்ற பாடம் இனிது பொருள் பயவாமையின் 'மாமணி' என்று பாடந் திரித்துக்கொள்ளப்பட்டது. சிறு தொடி-அன்மொழித்தொகை; விளி.

உள்ளுறை:—கிழங்கை வேண்டிப் பழங்குழியை அகழ்ந்த கானவன் மாமணியைப்பெறும் நாடன் என்றமையால் களவின்பம் நுகர விரும்பித் தலைவன் வழக்கம்போல் இன்று வந்து நொதுமலர் வரைவை அறிந்து அதனைத்தவிர்த்திடுவானாயின் நன்மணம் புரிந்து தன்னைப் பெறலாம் என்று குறிப்பித்தவாறும்.

---

கருவூர்க் கந்தப்பிள்ளையார்] 380 [முல்லை

குறித்தபடி கார்காலத்தில் தலைமகன் மீளாமையால் வருந்திய தலைமகள், இனிப்பனிக்காலத்தில் ஆற்றியிருப்பது எங்ஙனமென தோழியிடம் இரங்கிக் கூறியது.

விசும்புகண் புதையப் பாஅய் வேந்தர்
வென்றெறி முரசின் நன்பல முழங்கிப்
பெயலா னாதே வானம்; காதலர்
நனிசேய் நாட்டார் நம்முன் னலரே;
யாங்குசெய் வாங்கொல், தோழி; ஈஇர்ங்
கயத்துத் துய்மல ருதிர
முன்னா தென்ப பனிக்கடு நாளே.

(உரை). மேகம் விண்ணிடம் மறையும்படி பரந்து, வேந்தர் வெற்றியைப்பெற்று முழக்கும் முரசொலியைப் போன்று பலபட நன்றாக இடித்து மழைபெய்தலின் நீங்கா ஆயின; வெகுதூரதேசத்தரான காதலர் நம்மை நினைக்கிலர் (நினைத்து இங்குவந்திலர்); குளிர்ந்த குளத்திலுள்ள மென்மையான மலர்கள் உதிரும்படி இம்மழைக்காலத்திற்கப்பால் கடும்பனியோடு கூடிய பனிக்காலம் வருவதாகும். அப்பொழுது, தோழி, நாம் படுந்துயரம் இன்னும் அதிகமாகுமே; அதற்கு நாம் என்ன செய்கிறது?

விசும்புகண்: கண் - இடம். பாஅய் - பரந்து. துய்மலர்: துய்மை - மென்மை. முன்னாது - (விகாரம்) முன்னது, முந்திவருவதாகும்; மேல்வருவதாகும்.



# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

### 16. ஓவியமும் கவித்துவமும்.

[930-வது பக்கத்தொடர்ச்சி]

(4) ஆகாயத்தில் மேகங்கள் ஓடுவதும்,
மின்னுவதும் இடிமுழக்கமும்.

மைவான மிடற்றானை யவ்வான் மின்போல்
வளர்சடைமேன் மதியானை மழையா யெங்கும்
பெய்வானைப் பிச்சாட லாடு வானைப்
பிலவாய பேய்க்கணங்க ளார்க்கச் சூலம்
பொய்வானைப் பொய்யிலா மெய்யன் றன்னைப்
பூதலமு மண்டலமும் பொருந்து வாழ்க்கை
செய்வானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 6.

பெருகி யலைகின்ற வாறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
யுருகி நினைவார்த முள்ளாய் போற்றி
யூனந் தவிர்க்கும் பிரானே போற்றி
யருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருக்கயிலாயம்-திருத்தாண்டகம் 8.

முடித்தவன்காண் வன்கூற்றைச் சீற்றத் தீயால்
வலியார்தம் புரமூன்றும் வேவச் சாபம்
பிடித்தவன்காண் பிஞ்ஞகனும் வேடத் தான்காண்
பிணையல்வெறி கமழ்கொன்றை யரவு சென்னி
முடித்தவன் மூவிலைநல் வேலி னான்காண்
முழங்குமுரு மெனத்தோன்று மழையாய் மின்னி
யிடித்தவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே.

திருவேகம்பம்-திருத்தாண்டகம் 8.

கைம்மாமத கரியின்னின மிடியின்குர லதிரக்
கொய்ம்மா மலர்ச்சோலைபுக மண்டுங் கொடுங்குன்றம்
அம்மானென வுள்கித்தொழு வார்கட்கருள் செய்யும்
பெம்மா னவனிமையோர்தொழ மேவும் பெருநகரே.

சம்பந்தர்.

கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முந்நீர்
கரப்பானைக் கடியநடை விடையொன் றேறி
ஊர்பலவுந் திரிவானை யூர தாக
வொற்றியூ ருடையனைய் முற்று மாண்ட
பேரெழுத்தொன் றுடையானைப் பிரமனோடு
மாலவனு மிந்திர னு மந்திரத்தா லேத்தும்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேனே.

திருவெறும்பியூர் - திருத்தாண்டகம். 6.

வானகத்தில் வளர்முகிலை மதியந் தன்னை
வணங்குவார் மனத்தானை வடிவார் பொன்னை
யூனகத்தி னூறுதுணையை யுலவா தானை
யொற்றியூ ருத்தமனை யூழிக் கன்றைக்
கானகத்துக் கருங்களிற்றைக் காளத்தியைக்
கருதுவார் கருத்தானைக் கருவை மூலத்
தேனகத்தி லின்சுவையைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளங் குன்றினைச்சென் றடைந்தேனே.

திருமாற்பேறு- திருத்தாண்டகம் 8.

வேதமோர் நான்கா யாறங்க மாகி
விரிகின்ற பொருட் கெல்லாம் வித்துமாகிக்
கூதலாய்ப் பொழிகின்ற மாரியாகிக்
குவலயங்கண்முழுதுமாய்க்கொண்டலாகிக்
காதலால் வானவர்கள் போற்றி யென்றுங்
கடிமலர்க ளவைதூவி யேத்த நின்ற
பாதியோர் மாதினனைப் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.

திருப்பாசூர் - திருத்தாண்டகம் - 2.

நீர்த்திரளை நீள்சடைமே னிறைவித் தானை
நிலமருவி நீரோடக் கண்டான் றன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் றன்னைப்
பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் றன்னைப்
* காற்றிறளாய் மேகத்தி னுள்ளே நின்று
கடுங்குரலா யிடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடற் றிருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.

திருவாலவாய்த் திருத்தாண்டகம் 8.

(5) மழையாலுண்டாகும் அருவிவீழ்ச்சியும்
* இயற்கைச் சீவராசிகள் குழப்பமும் :—

உருவமு முயிருமாகி யோதிய வுலகுக் கெல்லாம்
பெருவினைப் பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான்மிக்க
வருவிபோன் சொரியுமண்ணாமலையுளாயண்டர்கோவே
மருவிநின் பாதமல்லான் மற்றொரு மாடி லேனே.

திருவண்ணாமலை-திருநேரிசை 3.

சுருளுறு வரையின் மேலார்
துளங்கிளம் பளிங்கு சிந்த
இருளுறு கதிர்நு ழைந்த
விளங்கதிர்ப் பசலைத் திங்கள்
அருளுறு மடிய ரெல்லா
மங்கையின் மலர்க ளேந்த
மருளுறு கீதங் கேட்டார்
வலம்புரத் தடிக ளாரே.

திருவலம்புரம்-திருநேரிசை 5.

---

* மின்னானை மின்னிடைசே றுமினானை வெண்
முகிலா யெழுந்த மழை பொழிவான் றன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லாதானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தையாகி
என்னானை யெந்தை பெருமான் றன்னை
யிருநிலமு மண்டமுமாய்ச் செக்கர்வானே
அன்னானை யாவடுதண் டுறையுண்மேய
வானடியே யடிநாயே னடைந் துய்ந்தேனே.

திருவாவடுதுறை - திருத்தாண்டகம் 2.

* உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள் மழலைம்முழ வதிர
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் மறுமே.

சம்பந்தர்.

கோடிடைச் சொரிந்த தேனதனோடுங்
கொண்டல்வாய் விண்ட முன்னீர்
காடுடைப் பீலியுங் கடறுடைப்
பண்டமுங் கலந்து நுந்தி
ஒடுடைக் காவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
பீடுடைச் சடைமுடி யடிகளா
ரிடமெனப் பேணினரே. சம்பந்தர்.

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொழிந்திழிந் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகோடு கதலியு முந்திக்
கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய்
எறியுமா காவிரி திருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
அறியுமா றறிகிலே னெம்பெரு மானை
யருவினை யுள்ளன வாசறுத்தானை.

*   *   *   *

வரையின்மாங் கனியோடு வாழையின் கனியும்
வருடியும் வணக்கியு மராமரம் பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
காம்பிலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரித் திருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
உரையுமா றறிகிலே னெம்பெரு மானை
யுலகறி பழவினை யறவொழித்தானை
சுந்தரர்.

வானிற்டோலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி யைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்றிரு நகரே.
சம்பந்தர்.

பொடிகொ ளுருவர் புலியி னதளர்
புரிநூ றிகழ் மார்பில்
கடிகொள் கொன்றை கலந்த நீற்றர்
கறைசேர் கண்டத்தர்
இடியகுரலா லிரியு மடங்க
ற்றுடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன் றுடையார்
கயிலை மலையாரே.

ஒன்றும் பலவு மாய வேடத் தொருவர் கழல்சேர்வார்
நன்று நினைந்து நாடற்குரியார் கூடித் திரண்டெங்கும்
தேன்றி யிருளிற் றிகைத்த கரிதண் சார னெறியோடிக்
கன்றும் பிடியு மடிவாரஞ்சேர் கயிலை மலையாரே.
சம்பந்தர்.

துறைபல சுனை மூழ்கித் தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந் தேனின மொலியோவாப்
பறைபடு விளங்கருவிப் பருப்பதம் பரவுதுமே.

நினைப்பெனு நெடுங்கிணற்றை
நின்றுநின் றயராதே
மனைத்தினை வலித்தொழிந்தே
னவலம்வந் தடையாமைக்
கனைத்தெழு திரள்கங்கை
கமழ்சடை கரந்தான்றன்
பனைத்திரள் பாயருவிப்
பருப்பதம் பரவுதுமே.

போதும் பொன்னு முந்தி யருவி புடை சூழக்
கூதன் மாரி நுண்டுளி தூங்கும் குற்றாலம்
மூதா ரிலங்கை முட்டிய கோனை மிறை செய்த
நாதன் மேய நன்னகர் போலுந் நமரங்காள்.
சம்பந்தர்.

விண்ணுர்ந்தன மேகங்கள் நின்று பொழிய
மண்ணாரக் கொணர்ந் தெற்றியோர் பெண்ணைவடபால்
பண்ணார்மொழிப் பாவைய ராடுந் துறையூர்
அண்ணா வுனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.
சுந்தரர்.

(6) ஆறும் வெள்ளமும்:—இக்காலத்தில். ஆற்று வெள்ளத்தில், சந்தனம் அகில் தக்கோலம் இஞ்சி இலவங்கம் வருவதில்லை. முற்கால வெள்ளம் அப்படி யன்று.

எறிக்குங் கதிர்வே யுதிர்முத்தமோ டேல
மிலவங்கந் தக்கோல மிஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திளைத்தேற்று சிற்று றதன்கீழ்க் கரைமேல்
முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல்
குருகத்திகண்மேற் குயில் கூவலறு
வெறிக்குங் கலைமா வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியே னையும்வேண் டுதியே.
சுந்தரர்.

ஏடு வானிளந் திங்கள் சூடினை
யென்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த
வழகனே யந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
சேட னேயுனை நான்ம றக்கினுஞ்
சொல்லு நா நமச் சிவாயவே.

சுந்தரர்.

தெள்ளும் புனற்கெடில வீரட்டமும்
திண்டீச் சரமும் திருப்புகலூர்
எள்ளும் படையா னிடைத்தானமு
மேயீச் சுரமுகல் லேமங் கூடல்
கொள்ளு மிலையத்தார் கோடிக் காவுங்
குரங்கணின் முட்டமும் குறும் பலாவும்
கள்ளருந்தத் தெள்ளியா ருள்கி யேத்தும்
காரோணந் தம்முடைய காப்புக்களே
காப்புத் திருத்தாண்டகம் 8.

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழ மநவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும் பொழில் கெழுவும்வயல் விரிநீர்விம லூரே.
சம்பந்தர்.

பாடார்ந்தன மாவும் பலாக்களுஞ் சாடி
நாடாரவந் தெற்றியோர் பெண்ணை வடபால்
மாடார்ந்தன மாளிகை சூழுந் துறையூர்
வேடா!வுனை வேண்டிக் கொள்வேன்றவ நெறியே.
சுந்தரர்.

மந்தமலர் கொண்டு வழிபாடுசெயு
மாணியுயிர் வல்ல மனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவுதை
செய்த மணிகண்ட னிடமாம்



சந்திரேடு காரகில்சு மந்துதட
மாமலர் கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயுமணல்
மாருதவி மாணி குழியே.
சம்பந்தர்.

சந்தன வேருங் காரகிற் குறடுந்
தண்மயிற் பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக் குவைகளும் பவளக்
கோடிகளுஞ் சுமந்து கொண் டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.
சுந்தரர்.

கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென் றணைதரு மேடகத் தொருவனை
நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன்
பாடல்பத் திவைவலார்க் கில்லையாம் பாவமே.
சம்பந்தர்.

---

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[935-வது பக்கத் தொடர்ச்சி]

### இரண்டாம் பத்து—5-ம் தசகம்.

**5-ம் பாசுரம்.**

ஆரா வமுதமா யல்லாவியுள் கலந்த
காரார்கருமுகில்போல் என்னம்மான் கண்ணனுக்கு
நேராவாய் செம்பவளம் கண்பாதம் கைகமலம்
பேராரம் நீண்முடிநாண்பின்னு மிழைபலவே.

குறிப்புக்கள்:—ஆழ்வார் திருவுள்ளத்தில் பகவானின் திவ்விய ஸௌந்தரியத்தின் ஒவ்வொரு அவயவமும் தத்தம் சேர்வையைக்கொண்டு வற்புறுத்தலால் ஒவ்வொன்றிலும் தாம் ஈடுபட்டு அநுபவிப்பதை உள்ளபடியே பேசுகிறார். ஆகையால் சொன்னதையே திரும்பச் சொல்லுகிற தோஷம் இக் கவிக்கு ஸம்பவிக்கிறதென்று எண்ண வொண்ணாது.

குறிப்பு:—"அல்லாவியுள்" என்றால் "அல்லாத ஆத்மாவிலே" என்று அர்த்தமாகிறது. அதாவது, ஆழ்வார் தம் நைச்சியத்தால் தாம் ஒரு வஸ்துகூட அன்று என்றும், அப்படி இருக்க, பகவான் தன்னை ஒரு நல்ல ஆத்மாவாகவும்,தான் ஆதரிக்கயோக்கியமாயுள்ள ஒரு பெரிய வஸ்துவென்றும் ஸங்கல்பித்துத்தம்மிடத்தில் கலந்த பெரும்பாக்கியத்தை அநுஸந்திக்கிறார். இந்தக் கலவியில் அவன் தன் உன்னதமான வடிவழகுக்கு ஆபரணச் சேர்வையும் கூட்டிக்கொண்டு கலந்தானென்று விஸ்மயித்துப் பேசுகிறார்.

---

**6-ம் பாசுரம்.**

பலபலவே யாபரணம் பேரும் பலபலவே
பலபலவே ஜோதி வடிவு பண்பெண்ணில்
பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம்
பலபலவே ஞானமும் பாம்பணைமே லாற்கேயோ.

பதவுரை:—பாம்பணை மேலாற்கு - ஆதிசேஷன் மேல் சயனிப்பவர்க்குள்ள, பண்பு மகிமைகளை, எண்ணில்-சிந்தித்தால், ஆபரணம் - ஆபரணங்கள், பலபலவே-அநேகம்; பேரும்-திருநாமங்களும், [அதாவது அந்தத் திருநாமங்களால் குறிக்கப்படும் திருக்குணங்களும் அச்சுதன் - அழிவில்லாதவன் - அழியாத தன்மை இந்நாமத்தால் குறிக்கப்படுகிறது. அநந்தன் - முடிவில்லாதவன் சாசுவதமாயிருத்தல் இந்தத் திருநாமத்தால் குறிக்கப்படுகிறது] பலபல-அநேகம்; சோதி வடிவு - ஜோதி பொருந்திய விக்கிரகங்கள், பலபல அநேகம்; உண்டு-வாயால் உண்டும், கண்டு-கண்களாற் கண்டும், கேட்டு-காதால் கேட்டும் உற்று - மெய்யால் தீண்டியும், மோந்து - மூக்கால் முகர்ந்தும், ஆகையால் மெய் வாய் கண் மூக்கு செவி இவ்வைம்பொறிகளால் அநுபவிக்கும், இன்பம்-இன்பங்கள், பல பல-பகவானுக்குப் பல பல விருக்கின்றன. ஞானமும் பல பலவே-ஞானமும் அநேகம்.

இறுதி "ஓ" காரம் ஆச்சரியத்தைக் குறிக்க வந்தது.

கருத்து:—இவ்வண்ணம் அநேகமான குணங்கள் உடையவன் கலவை தமக்கு ஏற்பட்டதென்று ஆழ்வார் ஆச்சரியப்படுகிறார்.

---

**7-ம் பாசுரம்.**

பாம்பணைமேற் பாற்கடலுள் பள்ளி யமர்ந்ததுவும்
காம்பணைத்தோட் பின்னைக்காய் ஏறுடனேழ் செற்ற [துவும்
தேம்பணைய சோலைமரா மரமேழெய்ததுவும்
பூம்பிணைய தண்டுழாய்ப்பொன் முடியம் போரேறே.

க்ஷீராப்தியில் பகவான் ஆதிசேஷனைப் படுக்கையாக்கிப் படுத்ததுவும், மூங்கில்போல் தோள்களையுடைய நல்பின்னைப் பிராட்டியை விவாகம் செய்துகொள்ளும் பொருட்டு ஏழு காளைகளை அடக்கிக் கொன்றதுவும், தேன்பொருந்திய பூக்களடர்ந்த ஏழு மராமரங்களை ஒரு பாணத்தாலே இராமாவதாரத்தில் துளைத்து சுக்கிரீவனுக்கு நண்பனாகி அவனை ரக்ஷித்ததுவும், அழகாகப் பிணைக்கப்பட்ட திருத்துழாயை உடைத்தான பொன்முடியைத் தரித்த பகவான் செய்தார்.

குறிப்பு:—இவ்வர்ணனையின் பிரயோஜனம் - ஆழ்வார் தமக்காகவே பகவான் இவைகளைச் செய்தருளினதாகக் கொள்கிறபடியால் அவைகளைக் கணக்கிட்டுச் சந்தோஷப்படுகிறாரென்று பழைய உரைகாரர் கருதுகின்றனர்.

---

**8-ம் பாசுரம்.**

பொன்முடியம் பேரேற்றையெம்மானைநால்தடந்தோள்
தன்முடிவு ஒன்றில்லாத் தண்டுழாய் மாலையனை
என்முடிவு காணாதே என்னுள் கலந்தானைச் [லீரே
சொல்முடிவு காணேன் நான் சொல்லுவதென் சொல்

பொழிப்புரை:—சுவர்ண கிரீடத்தைத் தரித்து எல்லா லோகங்களுக்கும் ஸர்வேசுவரனாய், யுத்தத்தில் வீரத்தன்மையால் விளங்கும் என் பிரபுவாயிருந்து,

காலுமுஜங்களுடைத்தாயிருந்த எல்லையில்லாத உத்தம குணங்களை எல்லா உலகத்தவர்க்கும் அறிவித்துக் கொண்டிருக்கிற பிரபுவை நான் எங்ஙனம் வர்ணிக்கக் கடவேன். மற்றத் தேவர்களைக் காட்டிலும், கான் . ஆறன் அல்லன் என்று ... எல்லாக் குறைவு களுமுள்ள என்னுடன் கலந்து திருவுள்ளங் கொண்டவனால், இவனெல்லாம் அவன் எளிமைகளிடத்தில் பரமபதத்தில் பெருந்தகைமைச் சௌசீல்யமும் மிகுந்து பாராட்டப் பாலது. இந்த சௌசீல்யத்திற்கு பயமால் நான் குறிக்கத்தக்கது ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கண்டால் சொல்லுங்கள். என்றார்.

9-ம் பாசுரம்.

சொல்லீரென் னம்மானை யென்னாவி யாவிதனை
எல்லையில்சீர் என்கரு மாணிக்கச் சுடரை
நல்ல வமுதம் பெறற்கரிய வீடுமாய்
அல்லிமலர் விரையொத் தானல்லன் பெண்ணல்லனே.

"இப்படி அவனுடைய குணங்களைச் சொல்ல நில மன்றியே யிருக்கையிலும் தம்முடைய ஆற்றாமை யாலே, அவன் குணங்களைக் காலதத்துவமெல்லாம் சொன்னாலும் அவற்றிற்கு ஒரு முடிவு காண்கிலேன். பின்னையும் அவனுடையகுணங்களைச் சொல்லிப் பரம இன்பம் பயக்குகிறவனாய் ஆண்பெண் என்கிற விபா கத்தினால் சொல்லவல்லாதவனாய் எல்லா வஸ்துக்க ளைக்காட்டிலும் வேறு ஜாதியுடையவனாயிருந்து, தன் னழகாலே எனக்கு இன்றியமையாத் துணையாய் என் னுள்ளே புகுந்து கலந்தருளின எம்பெருமானுடைய ஸௌசீல்யாதி குணங்களை ஓ! வைஷ்ணவர்களே! நீங் களும் சொல்லி அவனைப் புகழுங்கோள்" என்கிறார்- ஆறுயிரப்படி.

குறிப்பு:— வேதத்தில் பகவானைப் புருஷனாகவல் லவோ விவஹரித்திருக்கிறது. ஆழ்வார் "ஆணல்லன்" என்பது ஒக்குமோ எனின் - சாதாரண ஆணல்லன் என்பது தாத்பரியம். எவ்வண்ணம் பெண்ணுக்கும் ஆணுக்கும் நடுவில் வித்தியாஸம் கிடக்கின்றதோ, அதுபோலே "புருஷோத்தமனை" பகவானுக்கும் மற் றப் புருஷர்களுக்கும் அந்தராயமுண்டு என்ற தாத்பரி யத்தால் ஆணல்லன் என்று கூறியதாகக் கொள்ள வேண்டும்.

ஆழ்வார், தம்மால் பகவானுடைய குணங்களையும், முக்கியமாய் அவன் ஸௌசீல்யத்தையும் பரக் கப் பேச முடியாதென்று முன்பாட்டில் கூறினார். மற்ற வைஷ்ணவர்களும் கூடச்சேர்ந்து சொன்னால் ஒருக்கால் வர்ணனை நிறைவு படாதென்ற திரு வுள்ளத்தால் அவர்களையும் கூடப் பகவானைப் புகழ் வதற்கு அழைத்துக்கொண்டாரென்று கொள்ள வேண்டும்.

10-ம் பாசுரம்.

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணுமுரு வாகுமல்லனுமாம்
கோணை பெரிதுடைத்து எம்பெம்மானைக்கூறுதலே

பதவுரை:— ஆணல்லன், பெண்ணல்லன், அல்லா அலியுமல்லன்-ஆண் பெண் இரண்டு மில்லாத நபும் ஸகன் ஆகிய இந்த மூன்று இனங்களில் ஒன்றுமல் லன். காணலுமாகான் - அவனிடத்தில் பக்தியல்லா தார்க்குக் காணமுடியாதவன். உளனல்லன்-தற்காலம் உடனே காணக்கூடியவனல்லன். அதாவது பக்தி செய்து முயலாதவர்க் கரியன். இல்லையல்லன் -ஆனால் ஆச்ரிதருக்கோ-இல்லாத வனல்லன்; பேணுங்கால் - தவத்தால் முயலும் காலத்தில், பேணு முருவாகும்- தபசிகள் மனம்போல் உருவெடுத்து அளிக்க வல்லன், அல்லனுமாம். தபஸ இல்லாதார்க்கு அவர் வேண்டும் ரூபத்தை எடுக்காதேயும் விட வல்லவனுமாம், இப் படிப்பட்ட எம்பெருமானைக்-கூறுதல் வர்ணித்தல்; கோணை பெரிது உடைத்து-மேல்கண்டது போன்ற பற்பல வேறுபாடுகள் பொருந்தியது. ஆதலால் சொல்லாது ஒழிவது தகுதியானாலும் அப்படி வாளா விருக்கத் தமக்கு முடியவில்லை என்கிறார்.

குறிப்புகள்:—பகவானின் குணவிசேஷம் சொல்ல முடியாது. முக்கியமாய் இங்கு ஆழ்வார் உரைக்கவந்த குணம் ஸௌசீல்யம்.

11-ம் பாசுரம்.

கூறுதலொன் றாராக் குடக்கூத் தவம்மானைக்
கூறுதலே மேவிக் குருகூர்ச் சடகோபன்
கூறின வந்தாதி யோராயிரத்திப் பத்தும்
கூறுதல் வல்லாருளரேல் கூடுவர் வைகுந்தமே

"காலதத்துவமெல்லாம் சொன்னாலும் ஆராதகுண சேஷ்டிதங்களை யுடையவனை எம்பெருமானைச் சொன்ன இத்திருவாய்மொழியைச் சொல்ல வல்லார் திருநாட்டிலே போய் எம்பெருமானை அநுபவிக்கப் பெறுவார் என்கிறார்"-ஆறுயிரப்படி.

# "என்னையும் பெற்றேன்"

ஒரு சிறு கதை.

கொடுப்பதன்முன் பாத்திரத்தின் தகுதிநோக்கிக் கொடுத்தலே முறையென வழங்கிவரு மொரு மொழி பழுதுறத் தான்பெற்ற செல்வமெல்லாம் கர வாது நல்கிநல்கி, பரிதியஞ்செல்வன் மகிழ்ச்சியுடன் தேயலாகும்மாலையொன்றில் செய்குன்றத்தயலிலோர் கைவண்ணச் சிறப்பினொடு திகழ்கின்ற ஏரியின் கரை யருகில் மின்னொன்று பெண்ணுருவம் பெற்றதெனப் பளிங்கினாற் சமைக்கப்பெற்ற இருக்கையொன்றில் வீற்றிருந்தாள் ஓர் பாவை நல்லாள். வள்ளலென வழங்கிவிட்டு வறுமையிலே உவக்கின்ற கதிரவன்தன் எளிமை கண்டு, வீற்றிருக்கு மக்காரிகையின் புரிகுழ லன்ன கருத்தமேகம் விண்கவர்ந்து எளிமையுற்ற ஞாயிற்றை மறைத்தகற்றியது. கிளையுறைப் பறவை யெல்லாம் பண்ணெடுக்கக் கலாபமயிற் குழாங்கள் களிப்புடனும் சதிமிதிக்க வந்துற்றுள் அந்திமகள். உலகெலாம் இனிமைமிகு அமைதியிலே தங்குமாறு கோலோச்சிக் கொலுவிருக்கும் அந்திதன் கோலத் தைக் கண்டார் எவர் உய்யார்.

அயல்நின்ற தோழியர்தம் குழாத்தொடு வார்த்தை யொன்றும் பேசாது எழிலுடை யச்சூழலைத் தான் தனியே பருகினளாய்ச் சமைந்திருந்த காரிகையாள்; தன் தொண்டைக்கனிவாய் திறந்து, விரலொன்றால்



கிரியெடுத்தான் கையிருக்கும் குழலன்ன மொழி யிசைத்தாள்:

"குயிற்குலத்தின் நற்குயிலாய், கிள்ளைகளின் கிள்ளையொன்றாய் நானிருந்து, விண்ணும் மண்ணும் உய்யுமாறு முடிவிலா இசையெடுத்து வாழ்வதல்லால் வேறொன்றில் விழைவிலாதேன்; அப்பேறு நான் பெருமாறு அருள்வதுனக் கருமையேயோ, அருளினால் உலகமீந்தாய்."

என்றவள் முடிக்குமுன்னர் அருகிருந்தவொரு நற்றோழி, "எம்பெருமாட்டி, மனுநெறி வழுவாச் சோழன் பெற்றெடுத்த செம்மலொடும் அவன்வளர்த்த உவவனமருங்கினில் உற்றிடுவாய் அப்பேற்றை விரை வினிலே, கலங்கவேண்டா. அவனொடு நீயுமுய்ய இசை யெடுக்க அருள்புரிவான் எம்பெருமான். அதுவரை காத்திருப்பாய்" என்று பரிகசச் சிரிப்புடன் பதில் மொழிந்தாள்.

"அடி, நின் சொல்வளச் சதுரங்கண்டேன், நன்று, நன்று.வளவன்றன் காதற்செல்வன் நல்லவனே.என்தந் தையும் தாயும் அவனைப் போற்றுகின்றனர். அவன் பேரெழிலும் பொருதொழிலும் மாதரொடு வீரர்தம் வாய்களிலே செழித்தோங்கி வளர்கின்றன......"

தோழியோ இடைப்புகுந்து, "தோள்வலியால் வெ ன்றவொன்றை வண்கையால் வழங்கிவிடும் ஆண்டகை யும் அவனுவான், அறியாயோ. கேரளத்தார் தண்டெ டுக்கத் தானே தனியிருந்து வெற்றிகொண்டு வள்ள லாய் அன்னவர்க்கே வென்றவந்நாட்டை மீண்டளித்த பெருமையினைப் பேசாத நாவுண்டோ; அவனால் இக லுடைந் திரிந்துபோனவர்கள் பாடலாகும் பொங்கத் தம்பொங்கோவைக் கேளாத செவியுண்டோ......" என்றவள் தொடரவே, மணத்தின்பால் விழைவிலாத வழுதியர் கோமகள் தோழிபுகழுமக் குரிசிலை இழித் துவிட எண்ணினளாய்,"வண்மைக்கு வாள்வேண்டா, வேல்வேண்டா, சிலையும் வேண்டா" என்றொரு வம் போதினாள்.

"எமதருமிறைவி, வாளுமுண்டு, வில்லுமுண்டு. மனுகுலத்தார் தவப்பயனாய் கோசலத்தில் வந்துதித்த கருணைக்கடவுளாம் இராகவன் கொற்றவில் தாங்கியே உலகந் தாங்கினான்."

"கொற்றவில் கொண்டவொரு இராகவன் உலகந் தாங்கியதும் வாலியைக் கொன்றதில்!"

"மூவரும் முதல்வனும் பாவமும் தருமமும் பகை வனும் உறவும் அனைத்துமாய அண்ணலின் செய்தி யை ஆராயும்வன்மை அடியேங்கட்கில்லை."

இவ்வண்ணம் மெல்லமெல்ல உரை வேறுவழி படர லாக மேலொன்றும் கூறவியலாது தோழியைநோக்கி, "உன்திறம் பேசநான் கற்கவில்லை. நன்று, வாள் கொண்டு குடிகாக்கும் வளவனது மனையினிலே, பிள் ளைகள் வளர்க்கும் கிள்ளையெனக் கொண்டவன்தன் இற்செறிந்த வாழ்க்கையை யானொருநாளும் விழை யேன். காற்றொடு காற்றாய்ப் பரிதியின் ஒளி யாய்ப் பண்ணினது இசையாய்ப் பறவைகள் சிலம் பிடு மொலியாய், எங்குமா யெல்லாமாய்த் தளையில்லா விடுதலையை விழைகின்றேன். நல்லானும் வள்ளலுமே யானாலும் என் மனமோ அன்னவன்பாற் செல்ல வில்லை." என்று கோமகள் உரைசொரிந்தாள்.

"எம் கோமான் பெற்றெடுத்த பொற்கொடியே, கற்றதால் நீபெற்ற பொருளில்லாச் சிலசொல்லை வழங் கிவிட்டாய். வயதினால் அநுபவத்தால் நின்னினும் முதிர்ந்தவளான என்னுரைக்குச் செவிகொடுப்பாய். நீ போற்றும் பறவைக்கும் கேளுண்டு துணையுண்டு விண்ணிலும் வரையுண்டு. ஓட்டமிலாத் தேக்கத்தாற் பெறவியலா விடுதலையை இருகரையால் பிணைப்புண்ட நதியே பெறுகின்றது."

தோழியின் இம்மாற்றம் சிற்றிடையாள் சிந்தனை யில் ஆழ்ந்ததோ இல்லையோ என்னுமுன் பூங்காவின் புறங்கடையிருந்து நல்லிசைப் பாசுரமொன்று எங் கும் பரந்தது. இசை வந்த திசைவாய்த் திரும்பிக் கன்னியவள் நோக்கவும்,தம்தலைவியின் குறிப்புணர்ந்த வொரு தோழி வெளிச்சென்று பாணனை அழைத்து வந்தாள். ஒருகரத்தில் தண்டும் கமண்டலமும் மறுகரத்தில் தம்பூரும் ஏந்திவந்த அவனோ எழிலு டைத் தன் மேனியினைக் காவிவண்ண ஆடையினால் மறைத்திருந்தான். தோழியைத் தொடர்ந்து வந்த இளந்துறவி கோமகள்முன் நண்ணுதலும் காற்றினால் அலையாடும் அவன் தாடியினுள் இளமையே குறும்பு பயிலக்கண்டாள் குலக்கொடி. தவவேடத் தாடை யினுள் கரந்திருந்ததுவோ துறவுபூண்டார் வாடியுலர் ந்த மேனியன்று, பின் உலமன்ன திரண்டதோளே. எதிர்நிற்கும் கோமகளைச் சிறிதுபோழ்து உற்று நோக்கி, 'வாழி எம் கோமகள், வாழி எம் வழுதி யர் திருமகள், வாழி வாழி நின் குலமெலாம்,' என்று வாழ்த்தி, 'அம்ம, துறவியாம் யென்னைநீ இக்கன்னிக் கோயிலுள் அழைத்ததேனோ, அருளுவாய்' என்று கேட்டான்.

"ஐய, நின் முகமது காட்டும் இளமைக்கும், நீ புனைந்துள்ள கோலத்திற்கும் பொருத்தமொன் றுள தோ வென்று தேடுகின்றேன்" என்றுகோமகள் வீணைதரு ஒலித்திரளைச் சொல்லாக்கி எதிர்உரைக்க, அன்னவனும், "உண்டு, உண்டு; பொருத்தமுண்டு; மயங்கவேண்டா." என்றான்.

துறவியின் உரையும், அவன் நிற்கும் நிலையும், கரந் துவரும் அவன்எழிலும் கன்னிமனக் கோயில்புக் குழக்க அவள் சிறிது தளர்வுற்றாள். காற்றுடன் கலப் பதும், பறவையாய்ப் பறப்பதும் இசையெடுப்பதும் ஆய தளையிலா விடுதலைச் செய்தியெல்லாம், துறவி யால் நிறையலான கன்னியின் மனங்கழன் றகன்றன. தன்முன் நிற்பானை நோக்கினாள், நெட்டுயிர்ப்புப் போக்கினாள். பின் சிறிது தேறலுற்று, "ஐய, நீயாரோ, வதிவதும் எவ்வூரோ" என்று வினவ, "துறந்தார்க்கு வீடென்றும் வாயிலென்றும் வதிகின்ற ஊரென்றும் ஒன்றுமில்லை. செல்லுமிடமெல்லாம் எம்மூரே" என்று பதில் மொழிந்தான். 1891

"புறவாயில் நின்று பாடியது நீதானோ? துறவியர் பண்ணளாவிய போகத்திற் பயில்வதும் யோகத்தின் ஒரு படியோ, அறியேன்."

"மயிலனையாய், அதுவும் ஒருபடியேதான். நாரத ரும் துறவியன்றோ?"

"பண்ணையே வென்றுவிட்ட நின்தீங்குரலின் இன் னிசையை நான் செவிமடுக்கப் பாடுவாயோநீ மீண்டு மோர் முறை."

"நீ விழைவது அதுவாயின் ஒருமுறையன்று நூறு முறையும் பாடுவேன். வேண்டியவர் வேண்டியதை வேண்டியவாங்கே உவகையுடன் அளிப்பதே துறவு பூண்டார் அறம்' என்று கூறிய அவ்விளந்துறவி

விரைந்து சுருதி கூட்டி, அச்சுருதியிலேதான் கலந்து பாடினான்:—

பொழிலிடை விரிமணற் பாங்கரில் மடமயில் புடைவரு
மெழிலுடை மாதரார் இணையடி புரிநடைச் சுவட்டிடை
யிழிவுறு சிறுபுலன் எரிபடு மாசென மாய்வுற
வழிவுறும் படிசெயும் அரும்பெறற் பேறுபெற் றுய்வரே."

"கார்கு லாவுகுழல் குலமணிக் கதிர்பொழி
வார்கு லாவுநகில் மங்கையர் தேம்பிழி
சீர்கு லாவுசுவைத் தேமொழி நன்னலஞ்
சேர்கி லாதுய்ந்தவ ரில்லையித் தீவிலே."

இம்மையும் நல்கிவைத்துச் சான்றவர் விழையுமந்த
அம்மையும் நின்றளிக்கும் வீறுகொள் எருமை வாய்ந்த
பெண்மையைப் பற்றிநாளும் போற்றிடாப் பேதை யர்க்குச்
செம்மைசேர் வீடோ வில்லை யென்றனர் சிறந்த நூலோர்."

இவ்வாறு இசையெடுத்த துறவியும் முடிக்கு முன்னர்த் தன்னினைவு துறந்துநின்ற கன்னியும்,கிளையிலே கடுவனொடு உவந்திருந்த மந்தியொன்று பிடிகழன்று கீழ்விழுந்த ஒலியினால் சிறிது மயக்கந்தெளிந்து "வழுதியர்கோன் ஒருமகள் வதிகின்றகோயி லிதுவென்று மதியாது, நீ புனைந்த வேடத்திற்கேற்காமல் இவ்வண்ணம் பாடுதற்கு யார் கொடுத்தார் இத்துணிவை." என்று சீறலும், "மானனையாய், துறவு தழைப்பதும் துணிவிலே என்பதறியாயோ. துறவிக்குக் கோமானும் துரும்பன்றோ. மற்று முறைகடந்தவகை நானென்றும் புரியவில்லை.பெண்ணே, கேட்பாய். உன் பதி கோயில்கொண்ட அந்தக் கங்கையணி சொக்கனே அகப்பொருள் நல்நூலை உலகிற்கு அருளினான்.மாணிக்கவாசகனும் கோவையைத்தொடுத்தளித்தான். ஆதலால் அம்ம, துறவுநிலை தவறியொன்றும் நான் செய்யவில்லை" என்று அவன் எதிர்மொழிய, 'நின் மாதவக் கோலத்தின் மாண்பை யெல்லாம் காதலால் கலைத்தழித்த கைதவமுடையோய், இம்மை தவழ் கடிகாக்கடந் திங்ஙனே அகல்தி" என்று அவனை விலக்கினளாய்த் தன் வயங்கொளி மாளிகைக்குள் தையலெய்தினாள்.

நாள்சில கழிந்தன. ஆனால் அன்று வந்த இளந்துறவி கன்னிமனம் விட்டகலவில்லை. பெற்றோர் மனங்களியுறச் சென்னியம் செல்வனை, மணப்பதா, தன் உள்ளத்திருந்துறையும் அப்போலித் துறவியின்படிவத்தோனை மறப்பதா என்று உன்னிஉன்னி நைந்து நைந்து வாடலானாள். பொற்கொடி இவள் இதனாலடைந்த மாறுபாடுணர்ந்த பாண்டியர்கோமான் சோதிடர் குறித்தவொரு நற்றினத்தில் சோழனது செல்வனுக்குந் தான் பெற்ற கொம்பிற்கும் மணம் நடத்துவித்தான். பெண்ணும் பெற்றோர் மனப்படி மணமாலை சூடினாள். பின், பெற்றவர்தம் ஆசியோடும், பிறந்தகத்துப் பரிசிலோடும் தாதியர் உடன் செல்லத் தன்னைக் கொண்டான் வைகிய கோநகர் சென்றடைந்தாள்.

கொண்டவன் அல்லால் வேறு ஒரு தெய்வமுமில்லை கற்புடைய பெண்டிர்க்கு என்னும் முதுமொழி மனங்கொண்டு கணவன்முகம் கோணாது கோமகள் இல்லறம் நன்கு நடத்தினாளேனும் அன்று கன்னிக்கோயில் போந்த கபடனது நினைவோ அவளை மனம் கழன்றதில்லை. தனியே இருக்கையில் தன் விதியினை நினைந்து நைவாள், உள்ளங் கவர்ந்த வக்கபடனை மறக்க முயல்வாள், இயலாது ஏங்குவாள். மனத்தினால் பிழைத்துழலுந் தனக்கு உய்வுண்டோவெனத் தேவாள், நெட்டுயிர்ப்பு வீங்குவாள். வெவ்வரவின் வாய்ப்பட்டு வாடுகையில் கற்பரசி தமயந்தி 'மன்னவா, நின் திருமுகம் பாராது போவதல்லால் வேறொரு குறையில்லை' என்னும் கற்பின்கொழுந்தாய வாசகங்களை நினைக்குந் தோறும் நாணத்தால் நீற்றுதிர்வாள்.

இன்னபடி ஒரு நாள் தனியமர்ந்து கோமகள் வாடி வருந்துகையில் அவள் இடக்கண்ணும், இடது தோளும் துடித்தன. "துடிக்கின்ற கண்ணுந்தோளும் என்பாற் புரிவதற் கென்னுளது. கையால் ஒருவனை மணந்து மனத்தால் வேறொருவனை நினைத்துப் பிழைக்கின்ற பாவியேன் எனக்குச் சாங்கால மல்லால் நற்செவ்வி யென்றுளது" என்னாவுன்னி நைந்திருக்க அவள் நாயகன் புன்முறுவல் பொலிதரும் முகத்துடன் அவள்பால் எய்தி, வாடிய தன் தலைமகளின் முகங்கண்டு, 'காலைக்கதிரென நான் வந்தடைந்தும், இத்தாமரை குவிந்ததேனோ' எனக் கேட்டு ஆர்வமுடன் அணைத்தவனாய் 'என்னுயிரே என்னுற்றாய்' என்னலும், கோமகளும் வலிந்து தன்முகந் திருத்திக் கொண்டு, 'விரகறியாக்குற்றவ, உன்னை நான் பெற்றபிற்றை உறுவதற் கொன்றுளதோ ஐய,' என்றுபதில் மொழிந்தாளைச் சிறிது நோக்கிப், 'பின் நாடகமே நடிக்கின்றாய்' என நகைத்தான். இம்மாற்றம் அவள் உள்ளத்தில் முள்ளெனத் தைத்தது. 'தன்கரவு தெரிந்தனனோ' என்று சோர்ந்தாள். சோர்ந்தவளை வாரியெடுத்து மடிமீதிருத்தி 'பாசுரங்களி லுனக்காசையுண்டோ,' என்று கேட்டான்.

'அதனில் விழைவிலாத மாந்தர் இவ்வுலகிலில்லை. என்றாலும், என்செவியோ பாட்டிற்கு இடமில்லாது தூர்ந்துபோயது' என்று அவள்வாயொன்று விளம்பிவிட அச்சத்தால் நடுங்கினளாய், 'அண்ணலே, புன்விதியேன் தனியிருக்க அவாவுகின்றேன், அருளுவாயோ' என்று வேண்டினாள்.

மன்னவனும் நாடகத்தை முடித்துவிட நினைத்தனனாய், 'அருளுவேன் தனிமையை நின்மனமுற்ற சோர்வைத் துடைத்தபின்' என்று கூறி 'இந்நகரில் ஓரிளந்துறவி வதிகின்றான். இசைதான் உருக்கொண்டு வதிகின்றதோ வென எல்லொரும் வியக்கின்றனர்' என்று அவன் மீண்டும் தொடர மங்கையின் பாதி உயிர் அகன்று விட்டது. தன் கரவைக் கண்டுகொண்டான் கோமகன் என்று அனற்படு புழுவெனத்துடித்தாள்.

துடித்தவள் துடிப்புக் கண்டு, நகைபயிலும் முகத்துடனே, 'அவனெழிலும் இசையும் பாட்டின்பொருளும் மாதரார் உயிர்களைக் கொள்ளை கொள்கின்றன' என்று எரிகின்ற அவள் உள்ளத்தில் எண்ணெயும் வார்த்தான். வார்த்து, "அன்னவன் இப்பொழுது நம் மனைக்கண் வந்துளான்; அவனைக் காண்போம் வா" என்றழைக்க "வேண்டா வேண்டா, மன்னவா, அவ்விடம் போகவே வேண்டா." என்றிவள் கதறினாள்.

சென்னியர் தோன்றலோ கதறுபவளை இருகரங்களாலும் மெல்லவே இழுத்தேகக் கழுவேறச் செல்லுமொரு குற்றவாளிபோல் மண்ணளந்து பின்னடந்



தாள். இருவருமொரு மண்டபத்தை எய்தினர். எய்தியதும் கோக்குமரன் தன் தலைவியை ஆங்கோரிருக்கையில் இறுத்திவிட்டு ஒருபுறமாய்ச் சென்றகன்றான். அவன் சென்ற சின்னேரத்திற்கெல்லாம் சுருதியுடன் இயைந்தவோர் நல்லிசை அவள் செவியகம் படுதலுந் துண்ணென நடுங்கினாள். பண்டை நாளவள் கருத்தைக் கலக்கங்கொண்ட அப்பெருந்தவத்தின் புனைவேடன் அன்று பாடிய பாசுரங்களையே பாடினனாய் எதிர்வரலும் மீகாமனில்லா மரக்கலம்போல் கொந்தளிக்கும் நிலையினளாய் அவள் வந்தவனைத் தீயுக நோக்கி, "கள்வனே இன்னும் ஏன் என்னை வதைக்கின்றாய். பொருந்தாவுன் துணிவைக் கழித்தகற்ற என் கொற்றவன் இருக்கின்றான். குருதிகொப்புளிக்கும் அவன் வாளும் இருக்கின்றது. யானிருக்கும் பதியெல்லாம் நண்ணியென்னை நையக்காண்பது தகவாமோ" என்று கடியவும், 'என் பிழையை நீயே தண்டிப்பாய்' என்று அவன்பொய்த்தாடி போக்கி நின்றான்.

இக்கபடக்கூத்தில் தன் கணவனையே கண்ட நங்கை உற்றதோர் வியப்பொடு உவகையும் எய்தினாள். "காதலி, நின் கருத்து முற்றியதோ" என்று அண்ணல் நகைபோக் வினவினான்.

"அலா நெறி ஆகுமோ அளியனென் நெஞ்சம்;நின்னைப் பெற்றேன், என்னையும் பெற்றேன். முற்றுதற்கினி யாதுளது." என்றவள் புளகித்து, தலைவன்தன் திருவுடைய மார்பினிலே மறைந்தமைந்து அன்று காவிடை விழைந்த விடுதலைப் பேறெல்லாம் எய்தப் பெற்றாள்.

இவ்வளவில், 'பிள்ளைகள் வளர்க்கும் கூட்டினிற் கிளியாக......வாழமாட்டேன்' என்ற வொரு சொல் பிறக்க, மங்கையவள் வியப்புடன் நாற்புறம் பார்க்கலானாள்.

'காற்றோடு காற்றாய்க்கலந்து பறவையாய்ப் பறந்து ...' என்று சொற்போக்கிக் கரந்த விடம் விட்டு ஒரு தோழி சிரிப்பொன்று சிரித்து வந்தாள்.

'அன்றுநான் சொன்னவெல்லாம், என்னருந்தோழி பொருளற்ற வாசகமே.'

'கூட்டினிற் தளையுண்டு கிடக்க நான்...'

"அவன் வாமநெடுந்தோளில் பிணிப்புண்டு கிடக்கின்றேன்."

"தளையில்லா......"

'தளையில்லா நிலையதினில் விடுதலை இல்லை, இல்லை.'

"பெற்றனையோ?"

"பெற்றுவிட்டேன் விடுதலையை எனதன்பன் அமைத்தளித்த விலங்கினுள்ளே."

என்று கூறித் தோழியை கட்டியணைத்து மெய்மறந்தாள்.

இக்காட்சியைக் கண்டிருந்த கோமகன் மங்கை அருகடைந்து, 'என் உயிரே, நானும் ஒன்று பெற்றுவிட்டேன்' என்று சொல்ல, 'என்னவோ அது மன்னவா' என்று கோமகள் களிப்புடன் கேட்கவும் "உன் உள்ளத்துத் திருவிடத்தில் பொய்த்தாடியும் காவி வேடமும் இல்லாமலே வைகுதற்கு ஓரிடம் இன்று நான் பெற்றுவிட்டேன்" என்று விடையிறுத்தான்.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[896-வது பக்கத் தொடர்ச்சி]

### வான்மீகர் வாய்மைசில வேண்டியவா றாமோதான்

கோப்பெருந்தேவி கோசலையின் தன்னேரில்லாத் தனிப்பெருந் தகைமையெல்லாம் தரைமட்ட மாமாறு கம்பர் சுல்கச்சூளுண்மையைத் தழுவிக்கொள்ளார்இது திண்ணம். வாலியின் மனைவி தாரையின் தன்மையை வான்மீகத்தினின்று முற்றிலும் மாற்றிச் செம்மைசெய்தஇக்கவிவரர் கோசலையைமட்டும்சிறிது மாற் றேற்றி அவளது "படிற்றுரைகளைச் சிறிது குறைத்துமறைத்துவைக்க வேண்டுவதல்லால்அவளியலடங்கலுமே நல்லதாகத் திருத்தித் திகழவைத்தலாகாதென்று அவள்பால்கொண்ட நெடும்பகை யாதென்றுன்ன இயலவில்லை. இராமனுக்குத் தயரதன் அரசினை நல்குதல் அறமுறை பிறழ்ந்ததோர் செயலென்று வான்மீகத்தில் அவள் நிந்திக்காதிருந்ததும், இலக்குவன்றன் வஞ்சினமொழிகளை நயந்திருந்ததும் எவ்வகைவசைக் கவளை இலக்காக்கினும், இவைகளுக்கு மாறாகக் கம்பர் தம் காவியகத்தே ஒழுகிய கோசலையும், உரிமையற்ற பேராசைத் தன்மகனுக்குக் கூட்டுவிக்க முயன்றாளென்றும் 'அம்முயற்சி முற்றுப் பெறுங்காலம் அணுகிய துணர்ந்தபோது தன் அறிவாற்றலால் ஆக்கிய ஆக்கத்துக்கு அவள் தன் அறிவளவில் திளைத்துக் களித்தாளென்றும், விநயமாகச் சுட்டப்பெற்றிருப்பது எவ்வயின் என்றென்று எத்துணை யாராய்ந்தாலும் விடைகாண லரிது. பரதனுக் கரசினைச் சேர்ப்பித்தல் "முறைமை யன்றென்ப தொன்றுண்டு" என்று அவள் மறுத்ததையும் 'இலேசாக்கி', 'நும்பிக்கி நானில நீ கொடுத்து ஒன்றி வாழுதி ஊழி பல' என்றுரைத்ததையும் காட்டாது தன் சுல்கச்சூள் கொள்கையை நிலைநிறுத்த முயல்கின்ற பாரதியார்முன்னர் மெல்லியல் ஏழைகோசலாதேவிகையற்று நிற்க நேர்வதைக் காண எல்லோருள்ளமும் பரிவுமிகக் கொள்ளும்.

தயரதனைத் தாழ்த்தியவிதந்தான் அளப்பரிய ஆழமுடைத்து. 'முன்னுரைத்தமொழி பின்னிடப்பொய்ப்பதுமல்லால் அப்பொய்யினை நிறைவேற்றற்கு இம்மனுவின் மரபுடைய வேந்தன் செய்தசூழ்ச்சிகள் இவையிவையெனப் பாரதியார் காட்டுவனவற்றைக் கருதுங்கால், இரக்கமும் அறமும்உகுத்துப் பொல்லாச் சூழ்ச்சிக்கே மறுபெயராய் நிலவிவரும் கீழ்நாட்டுச் சாணக்கியனும் மேனாட்டு மக்கிவெல்லியும் புகட்டிய கரவுடைப் புணர்ப்பெல்லாம் ஸ்ரீமான் பாரதியார் தீட்டுமொரு சித்திரத்தி லியங்குமித் தயரதனிட்ட பிச்சையே என்னல் வேண்டும். இந்தத் தயரதன், தன் சம்

மந்தி ஜனகனையும், தான் சென்ற சத்திரத்திற் சந்தித்தானே! முடிபுனை திருநாட்செய்தியை இடையூறு வருமென்றஞ்சிக் கேகயனுக்கனுப்பாத மன்னன்,

"கேகயனுக்குமட்டும் அழைப் பனுப்பாதிருந்தாற் கைகேயி சந்தேகத்திற் கிடனுகும்; கேகயனுங் குறைகூறுவான். அவனுக் கனுப்பாமைக்கோர் வியாஜம் வேண்டும். அஃதவனுடி சேய்மையாவதிற் சமைக்கப்பட்டது. மிதிலைக்கு அறிவித்துக் கேகயனுக் கறிவியாமை விபரீத வுணர்ச்சியையுடனே விளைவிக்கும். மேலும் கைகேயிக்குச் சேய்மைபற்றிய வியாஜத்தைப் பொருந்தப் புனைவதற்கு, மிதிலையர்க் கறிவியாமை பொருந்துமோர் கருவியாகும். மிதிலையர்கோன் பின் உண்மை யறியுங்கால் தாமதம் தன் மருகனபிஷேகத்திற் கிடையூறு மேன்பதுணர்ந்து தனக் குரையாமையை வெறுக்காமல், தன்மருகனுக்கத்தை முடித்து வைத்த சூழ்ச்சித்திறம் வியந்து அதன் பயன்பற்றி நயப்பதுங் கூடும் எனத் தயரதன் கருதினன்."

என்று ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் எடுத்துக் காட்டுகின்றனர். தன்னுடைய மிதிலைமாநகர் தீப்பற்றியெரியப் பார்த்திருந்தும், கோவணம் னொளுந்திற்றென்ன வோடிய ஏழைமாணவரோடு விரைந்தோடாது, குருவரர் யாக்ஞவல்கிய முனிவருக்கயலே நின்று வேதங்களை ஓதிய உரவோனும், சுகப்பிரம்மமே தேடிவந்து நற்பொருள் கற்றற்குரியோனும் ஆய இராஜரிஷி இச்சனகன் என்பதை அறிந்திருந்தும், மருகனுக்கத்தின்பொருட்டுத் தான் செய்த சூழ்ச்சியை நயப்பானவன் என்று தயரதன் எண்ணினனாயின் இவனின் மதியிலாக் கயவன் ஒருவனைக் கம்பரானுங் கற்பிக்க வியலாது. தன் வேட்டகத்திற்கும் தன் தனயன் வேட்டகத்திற்கும் மகுடாபிடேக நற்செய்தியைத் தயரதன் தெரிவியாததற்குக் காரணம் இவையென ஊகிக்கும் ஸ்ரீமான் பாரதியாரே,

"கேகயனையும் ஜனகனையும் தூரதேசஸ்தரானது பற்றி வரவழைக்க அவகாசம் நேராமையால் அரசன், 'இக்காரியம் நடந்தபின் அவர்கள் பிரியமான இக்காரியத்தைக் கேட்கலாம், என்று நினைத்து, அவசரப்பட்டாயினும் அவர்களை வரவழைக்க முயலவில்லை"

என்ற வான்மீகரின் மொழிகளை வேறோரிடத்தில் எடுத்து எழுதியுள்ளார். வான்மீகமுனிவர் விசதமாகக்கூறியுள்ள காரணத்தைக் கைவிட்டு, தான் ஊகித்தபடியே உட்கொள்ளவேண்டுமென்று ஸ்ரீமான் பாரதியார் வற்புறுத்த மாட்டாரென நினைக்கின்றோம். மிதிலையர்கோன் மாத்திரமன்றிக் கேகயனும் இராமபட்டாபிஷேகத்தைப் பிரியமான காரியம் என்று கேட்பான் எனமதித்த தயரதன்மனதில் கரவுநினைவொன்று மிருத்தற் கிடமில்லையே. ஆனால் வான்மீகமுனிவர் விளம்பிய இந்தச் சமாதானம் நிசமன்று என்பார்போல் ஸ்ரீமான் பாரதியார் வரைகின்றார். "மெய்ம்மறையா வான்மீகர்' என்று வேண்டிய விடங்களில் அவரைப் புகழ்ந்துவிட்டுத் தனக்கு வேண்டாதவிடத்தில் அம்முனிவர் வாய்மையை அயிர்க்கப்புகுதல் நேரிதென்று ஸ்ரீமான் பாரதியார் எண்ணினாராயின் தயரதனும் அவர்முன் கையற்று நிற்கவேண்டியது இன்றியமையாததே. தயரதனைப் பொய்யனுக்க விழைகின்ற ஸ்ரீமான் பாரதியாரது முயற்சியின் சுழற்சியில் கோசலையும் வான்மீகமுனிவரும் ஜனகவேந்தனும் அகப்பட்டு முழுகலாகின்றனர்.

இவ்வண்ணம் முழுகிற்கும் புன்விதிப் பெரியோர் பின்னுஞ் சிலருளர். மன்னியபுகழ் மாவேந்தன் தயரதன் தன்வாய்மையிழந்து அரசினை இராமனுக்களிக்கப் புக்க கைதவச் சூழ்ச்சிகளைச் சுமந்திரன் வசிட்டன் ஆதியோர் அறியாரோ, மற்று அறிந்திருந்தும் அதற்குத் தாமும் உடன்பட்டாரோ! இராமனுக்குச் சுல்கச்சூள் செய்தியை வெளிப்படுத்தியிருக்க வல்லார் யாரென ஆராயும் பாரதியார்,

"கோவிந்த ராஜாதி உரைகாரர், சுமந்தராதியரால் இராமன் இதைக் கேட்டிருக்கலா மென்று ஊகிக்கின்றனர். ஆனால் தென்மொழி வடமொழிகளில் மன்னிய இருபெருங் காவியக்கதையும் சுமந்திராதியோர் இதனைச் சொல்லகில்லாமையைத் தெளித்து வைக்கின்றது. ஆகவே பழமையுணர்ந்த தன் அன்னையாலாதல் அன்றேல் அவள் சார்பினராலாதல் இவ்வுண்மையை இராகவன் கேட்டிருக்க வேண்டுமென்று அறியக்கிடக்கின்றது"

என வரையுமிடத்துச் சுமந்திராதியோர் இதனை அறிந்தவர்களாய் அவர் கருதுகின்றார் என்பது தொனிக்கின்றது. சுல்கச்சூளுண்மையாயின் அதனைச் சுமந்திரன் அறிந்திருத்தலேயன்றி அறியாதிருத்தல் இயற்கையன்று. காலமோர் மூன்றும் நுனித்துணரவல்ல வசிட்டற் கிது மறையாயிருக்குமென்று எவரும் எண்ணார். எனின், தம்முயிர்க் குறுதியெண்ணாது தலைமகன் வெகுண்டபோதும் வெம்மையைத்தாங்கி நின்று நீதியை விடாதுரைக்கும் வீரர்களில் முதல்வனை சுமந்திரனும், ஐவரை அறுவராக்கித் தெரியும் தேவர்கள் மூவரில் நால்வராய்த் தயரதன் காவலின் ஆணையின் கடவுளாமெனக் கதிரவன் தொல்குலம் விளங்குமாறு மன்னிவைகிய வசிட்டனும், முறைபிறழ்ந் தழலுந் தயரதனைத் தகையாது வாளாவிருந்தனர் என்பதல்லால் அச்சூழ்ச்சிக்குத் தாமும் உடன்பட்டுத் தம்பொய்க்கைகளை உவந்துதந் துதவினராதல் வேண்டுமே. நினைத்தற்கும் நம்புதற்கும் ஒண்ணுச் செய்தி இதனிலும் வேறொன்றுளதோ. இதுவுமன்றி ஸ்ரீமான் பாரதியார் வாதிக்கும் வகைகளின் ஓர் இயற்கையை இவ்வாசகங் காட்டுவதையும் இங்குக் குறித்துக் கொள்ளலாம். சுமந்திராதியோர் இச்செய்தியை இராமனுக்குச் சொல்லகில்லாமையை இருபெருங் காவியக்கதையும் எவ்வண்ணம் தெளித்துவைக்கின்றதென்பதை அவர் கூறினாரலர். அன்னார் இராமனுக்குச் சொல்லினர் என்று எங்கும் சாற்றாமையே 'தெளித்து வைத்தல்' என்பதற் கொத்ததாயின், கோசலைதான் கூறினாள் என்ற சொற்களும் அவ்விரு நூல்களில் எங்குமிலாமையால் அவள்தானுங் கூறகில்லாமையையும் தெளித்துவைத்ததாய்க் கொள்ளலாமே. இப்படி ஒருநிலையி லிருப்பவர்களில் ஒருவர் கூறாமையால் மற்றவர் கூறியதாகக் கொள்ள வேண்டுமென்பது எவ்விதிபற்றி எழுகின்றதென்பதை ஊகித்துணர்தல் அருமை.

இது மிகவும் முக்கியமாகின்றது. நெடுமுடி தனக்குத் தந்தை சூட்டுமாறு நின்றநாள், சுல்கச்சூளினல்பரதனுக்கு அரசு உரியதாயதை இராமன் ஓர்ந்திலன்என்கின்றார் ஸ்ரீமான் பாரதியார். ஆனால், "வரனில் உந்தை சொன் மரபினல்" என்றதொடக்கத்துச்செய்யுளிற்கு



அவர் உரைக்கும் பொருளின்படி இராமன் இதனைப் பின்னொருநா ளறிந்துகொண்டவனாதல்வேண்டும். எனின், எற்றைக்கு எவர்வயின் இதனையவன் தெரிந்துகொண்டனன் என்பதைக் கணிப்பது கடமை. ஆதியிலேயே அறிந்திருப்பானாயின் முறையிலா அரசைத் தான் வெஃகிநின்ற வொரு அறக்கொடியோன் இராமனே ஆய்விடுவானென்றும், வெஃகாவிடின் தயரதனைத் தகைந்து அறத்தாறு நடத்தியிருப்பானென்றும் ஸ்ரீமான் பாரதியார் வரைவதனைத்தும் வாய்மையே. ஆனால் சுல்கச்சூளின் நினைவினற் கைகேயியையும், அதனை முதலில்அறிந்திராமையால் இராமனையும் ஒருங்கே காக்கமுயல்கின்ற ஸ்ரீமான் பாரதியார் மிகவும் வருந்துகின்றன ரென்பது அவர் வாதிக்கும் வாசகங்களினின்று நன்கு புலப்படும். சுமந்திராதியோர் இதனை வெளிப்படுத்தியதாக இருபெரும் நூல்களிலும் இல்லாமையால் அவர்களா லவன் தெரிந்துகொண்டிலன் என்பர். இப்படித்தானே மற்றக் கரிகளையும் நோக்கல் வேண்டும். "தந்தையொடு தன் பட்டாபிஷேக விஷயமாய்ப் பேசிவந்தபின் நகர்நீங்கும் வரை தயரதனுடன் மீண்டும் இராமன் சல்லாபித்திலன் என்பர் கம்பர். இருவரையும் மூன்றுமுறை சந்திக்கச் செய்த வான்மீகரும், தயரதன் தநயனுக்கு இவ்விவர மறிவிக்க இடந்தரக் காணேன்" என்னும் வாசகத்தில் ஸ்ரீமான் பாரதியாரும் அவ்வண்ணமே நோக்கவும் நேர்கின்றார். எனின், கோசலையேனும் அவள் சார்பினரேனும் இதனைக் கூறினர் என்பதும் எவ்விடத்தும் இயம்பப்பெறாமையால் கூறினவர் அன்னவரு மல்லர் என்று கொள்வதல்லால் வேறு நெறி யில்லையே. இவ்வண்ணம் ஒருவரும் அற்றைநாள் அச்செய்தியை இராமனுக்குக் கூறவில்லை என்ற முடிபு ஒருபுறமும், பரதனுக்கிது இராமனால் கூறப்பெற்றதினின்று இராமன் இதனை அறியாதானல்லனென்று எய்துகின்ற துணிவு மறுபுறமும் நின்று தொடருங்கால், பட்டாபிஷேக முயற்சிக்கு முன்னரே இராமனுக்கிது தெரிந்திருத்தல் வேண்டுமென்ற நிச்சயமொன்றே எஞ்சக்கூடியதாகின்றது. ஆயின், காகுத்தன் கதி என்னும் என்பதை அறையவேண்டுமோ. தன்வயின் வாஞ்சையால் வாய்மையை விற்றுவிட்டுக் கொற்றவன் அரசினைத் தனக்கு நல்குகின்றான் என்பது தெரிந்திருந்தும், "யாது கொற்றவன் ஏவியது அது செயலன்றோ நீதி" தனக்கெனும் பான்மையில் இராமன் மண்ணினை வெஃகிய தன் மதிக்கொரு அமைதிகூறி வாளாவிருந்தனன் என்பதல்லால் இக்கொள்கையால் விளையும்பொருள் வேறில்லை. இதனால், தம்பியின் மனைவியை விழைந்த வாலிக்கும், தம்பியின் அரசினை விழைந்த இராமனுக்கும் பேதம் பெரிது எங்குளது. தனக்குரிமையில்லாப் பெண்ணை நச்சிய இராவணனை மண்ணைநச்சிய வொருவன் பொருதவோர் கதையேயாய் இராமாயணம் முடிதல்வேண்டும். "பெருங்குணப் பெருமிதமுடையவ" னென்றும், "அறத்தை மறத்தலும் துறத்தலும் அறியாச் சிந்தையன்" என்றும், "அறத்தை அறிவுறுத்தி நெறிநிறுத்த விரும்பும் நேர்மையும் திட்பமும் உடையவன்" என்றும் இராமனைப் பாரதியார் பலபடி பாராட்டுவார், மெய்யே. வஞ்சனையன்றியே இராகவனை இவர் இவ்வண்ணம் புகழ்கின்றாராஞலும், தயரதன் பொய்யனெனின், அதனை இராமன் அறிந்தவனுமாயின் இத்துணைபுகழும் இராமனுக்குப் பொய்த்துவிடுகின்றது. கம்பர் காவியத்திற்கோர் இறையாயமைந்த வ்விராமன் மாயாத பெருப்பழிக்கே இரையேயாய் முடிகின்றான்—இது கொடுமை.

---

# தமிழ்ப் பாடம் 148.

## இலக்கணம்

[936-வது பக்கத் தொடர்ச்சி]

### லகர மெய்யீறு.

நிலை மொழியீற்று லகரமெய் வருமொழி முதல் இடையின மெல்லின வல்லின மெய்களோடு எவ்வாறு புணரும் என்பதை இனிக்கற்போம்.

I நிலைமொழி யிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் இடையின மெய்.

மொழிமுதலாக நிற்கக்கூடிய இடையின மெய்கள், யகரமும் வகரமும் ஆகிய இவை இரண்டே.

(a) நிலைமொழி யிறுதியில் லகரமெய்யும் வருமொழி முதலில் யகரமெய்யும் நிற்குமானல், யாதும் விகாரமின்றிப் புணரினும் புணரலாம், அல்லது ஒரு இகரம் தோன்றினுந் தோன்றலாம்.

கல் + யானை = கல்யானை, கல்லியானை.

அகில் + யாது = அகிலியாது

(d) நிலைமொழி யிறுதியில் லகரமெய்யும் வருமொழி முதலில் வகர மெய்யும் நிற்குமானல் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

வில் + வளைத்தான் = வில்வளைத்தான்.

அகல் + விளக்கு = அகல் விளக்கு.

சொல் + வேந்தே = சொல் வேந்தே.

கொல் + வேங்கை = கொல் வேங்கை.

வாயால் + விழுங்கு = வாயால் விழுங்கு.

II நிலைமொழி யிறுதியில் லகரமெய் + வரு மொழி முதலில் மெல்லின மெய்.

மெல்லினமெய்கள் ஆறினுள் மொழிக்கு முதலில் வருவன, ங ஞ ந ம என்னும் இவை நான்கு. இவைகளில், ஙகரமெய்யை முதலாக வுடைய சொல் 'ஙனம்' என்னும் ஒன்றே. அதுவும், அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் என, சுட்டு அல்லது வினு எழுத்துக்களுடன் சேர்ந்தேவரும். எனின், நாம் இங்குக் கருதவேண்டிய வருமொழி முதலெழுத்துக்கள், ஞ ந ம என்னும் மூன்று. இவைகளில், ஞகர மகரங்களை ஒன்ருகவும், நகரத்தைத் தனியாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(a) நிலைமொழி யிறுதி லகரமெய் = வருமொழி முதல் ஞகர மகரங்கள்

நிலைமொழி யிறுதியில் லகரமெய்யும் வருமொழி முதலில் ஞகரம் அல்லது மகரம் நிற்குமானல் எல்

லாத்தொடர்களிலும், நிலைமொழியீற்று லகரமெய் னகர மெய்யாகத்திரியும்.

முகில் + மூண்டது = முகின் மூண்டது—எழுவாய்த் தொடர்.

வில் + முறித்தான் = வின் முறித்தான்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.

தோல் + முரசு = தோன்முரசு = மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வாளால் + மாய்த்தான் = வாளான் மாய்த்தான்—மூன்றும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

அகில் + மணம் = அகின்மணம்—ஆறும் வேற்றுமைத் தொகை.

பகல் + ஞாயிறு = பகன் ஞாயிறு—ஏழாம் வேற்றுமைத் தொகை.

(d) நிலைமொழி யிறுதியில் லகர மெய், + வருமொழி முதலில் நகரமெய்.

i நிலைமொழி லகரமெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயிருந்து, அவ்விரண்டு எழுத்துக்களிலும் முதலெழுத்து குறிலாகவும் இருக்குமானல், வருமொழி முதலில் நகரம்வர—நிலைமொழியீற்று லகரமெய் வருமொழி முதல் நகரமெய் ஆகிய இவை இரண்டும் னகரமெய்யாகத்திரிந்து விடும்.

கல் + நாய் = கன்னாய்—மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

சொல் + நயம் = சொன்னயம்—ஆறும் வேற்றுமைத் தொகை.

நில் + நீ = நின்னீ—வினை முற்றுத்தொடர்

பல் + நெகிழ்ந்தது = பன்னெகிழ்ந்தது—எழுவாய்த் தொடர்.

II. நிலைமொழி இரண்டெழுத்திற்கு மேற் பட்டதாக வேனும், அல்லது இரண்டெழுத்து உடையதாக வேனும், முதலெழுத்து நெடிலாக வேனும் இருக்குமாயின் வரு மொழிமுதல் நகர மெய், னகர மெய்யாத் திரிவதுடன் நிலை மொழியீற்று லகர மெய் கெட்டுவிடும்.

கால் + நாழிகை = காணாழிகை

வால் + நரன் = வானரம்

அகல் + நிலம் = அகனிலம்

புகல் + நீ = புகனீ.

குறிப்பு:—இவ்வகையில் லகர மெய்யீறு, னகர மெய்யீற்றை நிகர்க்கும்.

## ஞான மொழிகள்.

அருளுருக் கொண்டு வந்தே
யடிமையை யாளுஞ் செல்வக்
குருபரன் மலர்ந்த செம்மை
குலவுதீம் மொழியின் கூட்டம்

வானம் மழையை வழங்குகின்றது, வெள்ளம்பரவி ஓடுகின்றது, குளம் நிறைகின்றது. குளத்தை வளைத்த கோடுகள் உடைந்தழிகின்றன. குளத்து நீர் கோட்டைக்குதித் தோடுகின்றனது.

எம்பெருமானே! உயிர்கள்மேற்கொண்ட கருணையென்னும் மேகம் அருள்மழையைப் பொழிக. பொழிந்தமழை என்னுயிர்க்குளத்து நிறைக. நிறைந்தவுடன் மண் பெண் பொன் என்னும் கோடுகள் அழிக. அழிந்தவுடன் அருள்வெள்ளம் கோடுகுதித்துப் பாய்க. அப்படிப் பாயவருகின்ற துறவுகாலம் எந்நாள்வரும்; அதனை அருள்க.

செந்தமிழ்ச் செல்வி! வீடு என்பது ஒன்றுண்டாயின், அதனை உயிர் அடைவது மெய்யாயின், எனக்கும் அதுகிடைப்பது துணிவாயின், அதனை நானடையும் வரையும் ஏந்நாவிலே இருப்பாயாக; இதுவே நீ அருளும் வரம்.

உலகப் பொருட்கள் நிலையற்றன. பற்றுவைக்கற்பாலன வல்ல. பற்றப்படுவது ஒன்றுண்டு, அது முருகன் கனைகழல். அதனை இறுகப்பற்றின் செம்மாந்திருப்பாய்.

அன்பென்பது உயிராகிய ஊற்றுமலையில் நின்று பாய்கின்ற தெளிசுவை நறுநீர். அது மூவிருமுகத்து முந்நான்கு கண்ணுடைச் சீரிய கரும்பு வளரும் உள்ளமாகிய வயலிற் பாயவேண்டும். அதற்கு ஒருவாய்க்கால் உண்டு. அதுபல பொந்துகளுடையது. அன்பு நீரை இறைத்து வாய்க்காலில்விட அது மண் பெண் பொன் பிறவாகிய பொந்துளாற் பொசிந்துவரும் புலத்துப் பாய்கின்றது. கரும்புவளர் செறிவையடையவில்லை. அதுவேயுமன்றி வாய்க்காலில், கோபப் பெருங்கல் மோகவேர் மதமாச்சரியச் சருகுகள் கிடந்து தடுக்கின்றன. ஆதலின் உடைக்கின்றது. அன்பனே! நீபொழுக் கிறைத்தனை இத்தனை காலமும். பொந்துகளைப் பொசியவிடாது நன்றாயடை. தடைகளை எடு, நீரை இறை. அந்நறுநீர் நேரேயோடி கன்னற் கழனியில் விழும். அது முற்றிய வழிப் பேரின் பத்தேன் சொரியும். உண்ணலாம், உய்யலாம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜன்ட்ஸ்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (1-8-0)

டிப்போ, பம்பாய்
கல்கத்தா




பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்.





# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50.
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

இனம்! இனம்!!

## வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும் ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துப் பயனடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

## கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது. ஆறு காண்டங்களையும் 5665 சிறந்த நேரிசை வெண்பாக்களாலுடையது.

விலை ரூபா **4.** தபால் செலவு வேறு

EDUCATIONAL PUBLISHING CO.
**Nungambakam, Madras.**

## அரவிந்தர் கடிதம்.

புதுச்சேரியில் ஞானத்துறை படிந்துவைகும் ஸ்ரீ அரவிந்தர் பத்து வருடங்களுக்கு முன்னர் தமதுமனைவிக்கு எழுதிய சில அரிய கடிதங்களின் மொழி பெயர்ப்பு நூல். இதன் விலை அணா 2. இரண்டணா ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்.— லோகோபகாரி ஆபீஸ்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

**Estd. NATIONAL 1906**
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office:*-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

*The "National" will surpass any other Company in these tests.*

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.
Apply to:— R. G. DAS & CO., *Managers.*
**T. ANANTACHARI,** B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

அறிக்கை.

கலாநிலயத்தின் முதலிரண் டாண்டு பைண்ட் புத்தகங்கள் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் வரைக.

**கலா நிலயம் ஆபீஸ்,**
**வேளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை**

## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத் தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது விலை ரூ. 1–8.

**விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.**



# வர்த்தமானம்.

'கலா நிலயம்' மூன்றுமாண்டு நாற்பத்து நான்காமிதழில் வெளியான "பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ" என்ற கட்டுரையைக் கண்டு களித்துப் பாடிய—

### நேரிசை வெண்பா.

பொன்போ லெழுத்தாற் பொறிக்கலா மோவென்னப்
பொன்போல் வியாசம் பொறித்தனரா-லென்போன்ற
பண்டி-தரும் போற்றுங் கலா நிலயப் பத்திரத்தி
னெண்டிசைசூழ் சீரதிபரென் சுபம்!

பண்டித—செ. ரா. கணபதி சுப்பிரமண்ய அய்யர்,
சத்தியமங்கலம்.

---

### கீதையின் விசேஷம்

எங் இந்தியாப் பத்திரிகையில் காந்தி அடிகள், கீதையையும், இராமாயண பாரத நூல்களையும், மனிதராய்ப் பிறந்தவர்கள் அனைவோரும் படிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்:-

அந்தராத்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் நமது ஹிருதயத்தில் வஸித்துக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டு நாம் கீதையைப் படிக்க வேண்டும். அர்ச்சுனன் ஞானத்தை விரும்பியதுபோல் நாம் விரும்பும்போது அவரைப் பிரார்த்திப்போமானால் நம்மை இரட்சிக்க அவர் தயாராக இருக்கிறார். நாம் தூங்குகிறோம். அந்தராத்மாவாகிய பகவான் எப்பொழுதும் விழித்துக்கொண்டிருக்கிறார். ஞானத்தைப்பெற நமக்கு எப்பொழுது ஆசையுண்டாகுமென்று அவர் காத்துக்கொண்டிருக்கிறார். எப்படிக் கேட்டுத் தெரிந்துகொள்வதென்பது நமக்குத் தெரியவில்லை. எதையேனும் கேட்கவும் நமக்கு இஷ்டமில்லை. ஆகையால் நாள்தோறும் கீதைபோன்றதோர் கிரந்தத்தை மனனம் செய்யவேண்டும்.

பரப்பிரம்ம ஞானத்தைப் பெறவேண்டுமென்று நமக்கு ஓராசையுண்டாகும்படி செய்துகொள்ளவிரும்புகிறோம். இப்படிப்பட்ட நினைப்புடன் கீதையைத் தினந்தோறும் படிக்கிறவர்களுக்குப் புதுப்புது ஆனந்தம்உண்டாகும். நமக்குப் பக்தியில்லாத காரணத்தால் அதைச் சரியாகப்படிக்கவும் அதன் பொருளை அறியவும்முடியவில்லை. பாண்டவர்களும் கௌரவர்களும் குருக்ஷேத்திர மென்கிற தர்மக்ஷேத்திரத்தில் தத்தம் சேனைகளுடன் நிற்கும்போது கௌரவத் தலைவனான துரியோதனன் இருதரப்பிலுமுள்ள வீரர்கள் இன்னார் இன்னாரென்று தனது குருவாகிய துரோணரிடத்தில் வர்ணிக்கிறான். இரண்டு சேனைகளும் யுத்தத்திற்குச் சன்னத்தமாகின்றன. சங்கங்கள் ஒலிக்கின்றன. அப்பொழுது அர்ச்சுனனுடைய சாரதியாகிய பகவான் இரண்டுசேனைகளுக்கு மிடையில் அர்ச்சுனனுடைய இரதத்தை ஓட்டிக்கொண்டுபோய் நிறுத்துகின்றார். உடனே அர்ச்சுனனுக்கு ஒரு படபடப்புண்டாகிவிடுகிறது. "இவர்களுடன் நான் எப்படிப் போர்செய்வேன். எதிரிகள் வேறு யாராகவேனும் இருப்பின் நான் சண்டை செய்வேன். இவர்கள் எல்லோரும் என்உறவினர். கௌரவர்களாவது பாண்டவர்களாவது, என்ன வித்தியாச மிருக்கிறது; அவர்கள் சொந்தச் சகோதரர்களுடைய சந்ததிகளல்லவா? ஒரு தொட்டிலில் வளர்ந்தோமே. துரோணர் அவர்களுடைய குரு மாத்திரமல்லர், ஸகல சாஸ்திரங்களையும் எங்களுக்கும் அவரே போதித்தார். பீஷ்மர் எங்கள் குடும்பத் தலைவர். அவருடன் நான் எப்படி யுத்தம் செய்வேன்" என்று அர்ச்சுனன் பகவானைப் பார்த்துச் சொல்லுகிறான். "கௌரவர்கள் கொலைபாதகர்கள் என்பது உண்மையே. அநேகம் அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள். பாண்டவர்களுடைய பூமியைப் பிடுங்கிக்கொண்டு விட்டார்கள். திரௌபதியை அவமானம் செய்திருக்கிறார்கள். இதெல்லாம் உண்மைதான். ஆயினும் அவர்களைக் கொல்வதால் என்ன நன்மை உண்டாகும்? அவர்களுக்கு அறிவில்லை. நானும் அறிவில்லாதவனாக நடக்கவேண்டுமா? தர்மம் இன்னதென்றும் அதர்மம் இன்னதென்றும் நான் சிறிது அறிந்திருக்கிறேன். ஆகையால் பந்துக்களுடன் போர்புரிவது பாபமென்று நினைக்கின்றேன். பாண்டவர்களுடைய குடும்பச் சொத்தை அவர்கள் விழுங்கிவிட்டாலென்ன? எங்களை அவர்கள் கொன்றுவிடட்டும். நாங்கள் அவர்களைத் தண்டிக்க எங்களுடைய கைகளை எப்படித் தூக்கக்கூடும். "ஏ! கிருஷ்ணா எனது பந்துக்களாகிய அவர்களை எதிர்த்து நான் போர் புரியமாட்டேன்" என்றான்.

இவ்வாறு முதல் அத்தியாயம் முடிகிறது. இந்த அத்தியாயத்திற்கு அர்ச்சுன விஷத்யோகம் என்று பெயர். விஷத் என்ற சொல்லுக்குத் துன்பம் என்பது பொருள். அர்ச்சுனன் அடைந்த துன்பத்தை நாமும் அடையவேண்டும். மனோவேதனையும் ஞானம் பெறவேண்டிய அவாவும் இல்லாது ஞானம் வந்துவிடாது. எது தர்மம், எது அதர்மம் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படாத ஒருவன் மதசம்பந்தமான உபந்நியாசங்களால் என்ன பலனடைவான்? குருக்ஷேத்திரம் என்ற யுத்தகளம் இருக்கட்டும். நிஜமான குருக்ஷேத்திரம் நமது சரீரத்திலிருக்கிறது. அதுதான் குருக்ஷேத்திரம், அதுதான் தர்ம க்ஷேத்திரம், பகவானுடைய வாசஸ்தலமாக அதை நாம்பாவிக்க வேண்டும். இந்த யுத்த களத்தில் ஏதேனும் ஒரு யுத்தம் எப்பொழுதும் நடைபெறுகிறது. "இது என்னுடையது. இது உன்னுடையது" என்ற எண்ணமே இப்படிப்பட்ட சண்டைகளுக்குக் காரணம். "என்னுடைய ஜனம், உன்னுடைய ஜனம்" என்ற வித்தியாசத்தாலேயே இந்தச் சண்டைகள் உண்டாகின்றன. ஆகையால் ராகத் துவேஷாதிகளே நெறிதவறி நடப்பதற்கெல்லாம் காரணமென்று ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்கிறார்.

உலகத்திலுள்ளார் அனைவரும் உன்மதம், என்மதம் என்று வாதிடாது கீதையைப் படிப்பார்களேயானால், ராகத் துவேஷங்களும் சுயநலஎண்ணங்களும் அகன்றுவிடும். நாம் உய்வதற்கும் அதுவழிகாட்டி, உய்விக்கவும் செய்யும்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## அகராதிகள்.

| | | |
|---|---|---|
| தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்க ளுடன்)—மூன்று பாகம் ... | ரூ. 18 | அ. 8 |
| தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary ... ... | 10 | 0 |

### தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.

வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

---

### :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.



## நன்கறிந்த ஜீவன் - - - - - - சீயவன் ப்ராஷ்.

நிகரற்ற ஆயுர்வேத டானிக். இருமல், சளி,




க்ஷயம், இருப்பு முதலிய வியாதிகளுக்கு நல்ல மருந்து. இரத்தத்தை விருத்திசெய்து ஞாபகசக்தியைக் கூர்மைப் படுத்தும். நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும் நல்ல சக்தியும் தரவல்லது.

விலை:—1 பவுன் ரூ. 2-8-0. ½ பவுன் ரூ. 1-5-0. பாகிங் தபால் செலவுகள் வேறு.

குஜராட் ஆயுர்வேத பார்மஸி, அகமதாபாத்; என்னுமிடத்தில் செய்யப்பட்டது.

ஸோல் எஜெண்ட்ஸ்:—

சீதாராம் மெடிகல் ஸ்டோர்ஸ்,
87. நயனியப்ப நாயகன் தெரு,
பார்க் டவுன், சென்னை.

குறிப்பு:—மெடிகல் அட்வைஸ் இனாமாகக் கொடுக்கப்படும். பதிலிற்கு ஒரு அணா தபால் தலை அனுப்பவும். காட்லாக் இனாம்.



ஒட்டக்கூத்தர் பாடிய

## தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார், போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தாக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. **1-0-0.** (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)